பனிமுகிழ்

பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலையின்
20ஆண்டுகள் நிறைவின் நினைவுப் பதிவுகள்

சமர்ப்பணம்



பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலைக்கு வித்திட்ட அமரர். **அன்ரனி ராஜேந்திரம்** அவர்களுக்கு பனிமுகிழ் இதழினை பெருமையோடு சமர்ப்பணம் செய்கிறோம்!

அகத்தடக்கம்....

ஒரு முன்மொழிவு .... பக்கம்-04
பானுபாரதி

பாடசாலைக்கீதம் .... பக்கம்-07

தலைமை ஆசிரியரிடமிருந்து(தமிழில்) .... பக்கம்-08
செறின் சந்தியாப்பிள்ளை

தலைமை ஆசிரியரிடமிருந்து(Norsk) .... பக்கம்-09
Sherrene Santhiapillai

BERGEN TAMILSKOLE – VERDT EN FEIRING .... பக்கம்-10
Sigrun Rajendram

வாழ்த்து-Bergen Kommune .... பக்கம்-12

வாழ்த்து-St. Paul skole .... பக்கம்-13

வாழ்த்து-Hordaland Fylkeskommune .... பக்கம்-14

மதமும் வாழ்க்கையும் .... பக்கம்-15
அருட்பணி. ஜெகத் குணபாலா அ.ம.தி

இன்றியமையாதது .... பக்கம்-16
பாலபண்டிதர் ஆ. விவேகானந்தன்

எங்கள் கொடி .... பக்கம்-19

சில பதிவுகள் -நிழற்படங்கள்- .... பக்கம்-20

அரங்கில் -20ஆண்டுகள் நிறைவுவிழாவின் நிகழ்ச்சிகள்- .... பக்கம்-22

கடந்துவந்த பாதையின் சிறு குறிப்பு .... பக்கம்-23
எஸ்தாக்கி ஜெயராஜ்

எங்கள் வாழ்வு – நாடகம் .... பக்கம்-25
ரெத்தினம்

பத்துக் கட்டளைகள்-கவிச்சித்திரம் .... பக்கம்-28
சகிலா யூலியஸ்

சக்கேயுவின் தேடல் -நவீனம் .... பக்கம்-30
சகிலா யூலியஸ்

எமக்கென்று ஒருநாள் .... பக்கம்-32
ரெத்தினம்

மாணவர் ஆசிரியர்கள் -பட்டியல் .... பக்கம்-36

முகப்பு ஒளியோவியம்: இலக்கியா(14)
வடிவமைப்பு: தமயந்தி
வடிவமைப்பு, தயாரிப்புஆலோசனை: ஞானநாயகம்
பதிப்பகம்: உயிர்மெய் பதிப்பகம் நோர்வே
தயாரிப்பு, வெளியீடு: பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலை

பூரணஉரிமை: பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலை

காலம்: மாசி, 2008

ஒரு முன்மொழிவு!

-பானுபாரதி-

தாய்மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து மேற்குலகின் பல பாகங்களிலும் வாழும் இலங்கைத் தமிழர்களாகிய நாம் இந்த நாடுகளில் இரண்டு கலாச்சாரப் பின்னணி கொண்ட சூழலில் எமது தலைமுறையினரை வழி நடத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். குறைந்தபட்சத் தீர்வையேனும் எட்ட முடியாத இருண்ட சூழலில் இலங்கைத்தேசம் சிக்குண்டு கிடக்கையில் புலம்பெயர்ந்த தேசங்களிலான எமது இருப்பும் நிலைப்படுத்தப் பட்டுள்ளது. இந்த நிலையில் இங்கேயுள்ள எமது அடுத்த தலைமுறையினரின் வாழ்முறைகள், அடையாளங்கள், கலாச்சாரம் பற்றிய கேள்விகளும் அச்சமும் இயல்பாகவே ஏற்பட்டு விடுகின்றது.

குறிப்பிட்டதொரு இனக் குழுமங்களையோ அல்லது மக்கள் கூட்டத்தையோ அடையாளப் படுத்தும்போது மொழி பிரதானமாகக் கொள்ளப்படுகின்றது. பிஜித்தீவுகளில் வாழ்கின்ற தமிழர்களைப்பற்றி வரலாற்றுரீதியாக அறிந்திருக்கின்றோம். அவர்களது மத வழிபாடுகள், கலாச்சார நடவடிக்கைகள், அவர்கள் தங்களுக்கு இட்டுக் கொள்கின்ற பெயர்களினாலும் அவர்கள் தமிழர்களென அடையாளப் படுத்தப்பட்டபோதும் தாய்மொழி தொலைத்த மக்கள் கூட்டமாக அவர்கள் மாறிவிட்ட அவலத்தையும் காண்கிறோம். புலம்பெயர்ந்த தேசங்களில் வாழும் எங்கள் சந்ததியினரது எதிர்காலமும் நாங்கள் முன்னெடுக்கும் முயற்சிகளிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறான ஒரு சூழலில் பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலை இரண்டு தசாப்தங்களைக் கடந்து வந்திருப்பதென்பது இலகுவான விடயமல்ல. பலவிதமான சோதனைகள், தடைகள் என்பவற்றைக் கடந்து வந்துள்ள நிலையில், அவை கற்றுத் தந்த அனுபவங்களினூடாக எதிர்காலத் திட்டங்களை வகுப்பது மிகவும் பயன் தரும். நோர்வேயைப் பொறுத்தவரை சுயாதீனமாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச்சிறுவர் பாடசாலைகள் பல பிளவுண்டு போயின. வெகுஜன அமைப்புக்களின் சுயாதீனமான இயங்குதலை மறுதலிக்கின்ற போக்குகளினால் பல பாடசாலைகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலையும் அதற்கு இலக்காகி மாணவர்கள் பிளவுபடுத்தப்பட்டபோதும், பாடசாலை தொடங்கப்பட்டதன் நோக்கிலிருந்து விடுபடாது மீண்டும் புதுப்பொலிவுடனும், தனித்துவத்துடனும் இயங்கி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

தாய்மொழிக் கல்வியென்பது வெறுமனே மாணவர்களுக்குத் தமிழ் மொழியை எழுதவும் வாசிக்கவும் பயிற்றுவித்தல் அல்லது பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல் என்ற எல்லையோடு நின்று விடாமல், இன்றைக்கு மாணவர்களாக இருக்கக்கூடிய எங்கள் பிள்ளைகளை நாளைய இயங்கு சக்திகளாக ஆக்குவதில்த்தான் பாடசாலை தொடங்கப்பட்டதன் சரியான நோக்கம் நிறைவேற முடியும்.

ஐரோப்பாவில் இயங்குகின்ற தமிழ்ப்பாடசாலைகள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய

வசதிகளின் அடிப்படையில் பாடத் திட்டங்களையும், பயிற்றும் முறைகளையும் தம்மகத்தே கொண்டியங்குகின்றன. பாடசாலைகளின் கற்பித்தல் முறை என்னும்போது நோர்வேஜியப் பாடசாலைகளை எடுத்துக் கொள்வோமானால் ஒவ்வொரு மாணவர்களையும் தன்நம்பிக்கையுடன் படைப்புத்திறன் கொண்டவர்களாக உருவாக்குகின்றார்கள். இதே முறைமைகளை நாமும் கையாள்வதே பொருத்தமானதும், தேவையானதுமாகும். மேலே குறிப்பிட்டதுபோல் 'எனது பிள்ளை தமிழில் நூற்றுக்கு நூறு வாங்கி விட்டது' என்ற பெருமையோடு நாம் முடங்கிக் கொள்ளாது மொழியறிவின் எல்லையை விரிவுபடுத்துதல் வேண்டும். சுயமான தேடலும், படைப்பாற்றலும் பிள்ளைகளிடத்தே தோன்றுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

இன்று எல்லா வீடுகளுக்குள்ளும் வந்தமர்ந்து ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் வெகுஜன ஊடகங்களான தொலைக்காட்சிச் சேவைகள், இணையத்தளங்கள் போன்றவை எங்களது சிறார்களது நாளாந்த வாழ்வில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதை நாம் எல்லோருமே நேரிடையாக காண்கின்றோம். எமக்கும் தாய் நாட்டிற்குமான நெருக்கத்தை விடவும், இங்கே எமக்கும் பிள்ளைகளுக்குமான மொழிப் பரிமாற்ற நெருக்கத்தை விடவும் தொலைக்காட்சிப் பெட்டிக்கும் பிள்ளைகளுக்குமான, இணையத்தளங்களுக்கும் பிள்ளைகளுக்கமான நெருக்கமே அதிகமாயுள்ளது. இந்த ஊடகங்களின் ஆதிக்கமே பிள்ளைகளின் சிந்தனையை இலகுவாக ஆக்கிரமித்து விடுகின்றன. இந்த ஊடகங்கள் பிள்ளைகளின் சிந்தனையை சீரிய முறையில், சுயதேடலும், படைப்பாற்றலும் உள்ளவர்களாகவும் வழி நடத்துகின்றனவா என்ற கேள்வி எழுமிடத்து மிகச் சோகமான பதிலேதான் கிடைக்கப் பெறுகின்றோம். ஆயினும் இந்த ஊடகங்களே எதிர்கால சந்ததியினர்க்கு உற்ற தோழர்களாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே தற்காலத்தில் எம்மால் நெறிப்படுத்தப் படுகின்ற இந்தத் தலைமுறையினர் ஒரு ஆரோக்கியமான சமூகத்தைச் சமைக்க வல்லவர்களாக இந்தத் தொடர்பூடகங்களைக் கையாளும் திறன் மிக்கவர்களாக ஆக்கப்பட வேண்டும்.

அத்தோடு நாம் மீண்டும் மீண்டும் தொடர்ந்து பழந்தமிழர் வரலாறுகளுக்குள் மட்டுமே சுற்றிச் சுழன்றுகொண்டிருக்காது அதற்குமப்பால் செல்லவேண்டிய தேவை இன்று நிறையவே உள்ளது. சமகாலப் படைப்பிலங்கியங்கள், புலம்பெயர்ந்தோர் படைப்பிலக்கியங்கள், படைப்பாளிகள் பற்றிய அறிதல்கள், இன்றைய படைப்பிலக்கியத்தின் பின்புலங்கள் போன்ற இன்ன பிற விடையங்களிலும் பிள்ளைகளை நெறிப்படுத்த வேண்டும். ஏனெனில் இலங்கைத் தமிழரின் புலப் பெயர்வுக்குப் பின்னால் தமிழ் இலக்கியத்தில் பல புதுமைகளும், சிறப்புகளும் நடந்தேறியுள்ளன, நடந்துகொண்டிருக்கின்றன. அடுத்தடுத்த தலைமுறையினரிடம் இவற்றின் சிறப்புக்களை கொண்டு சென்று சேர்க்க வேண்டியவர்கள் இன்று மாணவர்களாயிருப்போரே. இவை தவிரவும் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் இன்று மிக முக்கியமானதும் தேவையானதுமாகும். தமிழில் உள்ள நல்ல இலக்கியங்களை இந்த நாட்டு மொழிகளில் அறிமுகம் செய்ய வேண்டிய தேவையும், இந்த நாட்டு சிறந்த இலக்கியங்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்ய வேண்டிய தேவையும், கடப்பாடுமுள்ளது. இந்தப் பணியை தமிழ்ப்பாடசாலைககள் மூலமே ஆரம்பித்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அது சாத்தியமானதும்கூட.

உலகத்து மக்களை ஒன்றிணைப்பதும், சத்தியத்தின்பால் நெறிப்படுத்துவதும், ஆரோக்கியமான மனித சமூகத்தை உருவாக்கவதும் வெகுஜன ஊடகங்களாகும். இன்றைய தமிழ் ஊடகங்களைப் பொறுத்தவரை நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்திற்கும்மேல் பொய்யுரைப்பனவாகவே உள்ளதை அன்றாடம் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதற்கு முதன்மைக் காரணமெதுவென நாம் உற்று அவதானிக்கமிடத்து புலப்படுவது முக்கியமாக ஒன்றேயொன்றுதான்: சத்தியத்தின்பால் உழைக்கவல்ல, மக்களுக்காக உண்மை பேசத் துணிவுள்ள ஊடகவியலாளர்களின் வறுமையே. இவற்றையும் கருத்திற் கொண்டு இந்த நாடுகளில் பிறந்து வளரும் எமது இன்றைய தலைமுறையினர் உண்மையின் பக்கம் பேச வல்லவர்களாய் வளர்க்க வேண்டியதும், நெறிப்படுத்த வேண்டியதும் எமது பாடசாலைகளின் பணியே என்பதை நாம் மறக்கலாகாது.

பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலையின் கடந்தகால நடவடிக்கைகளையும், அதன் வளர்ச்சிக்காக தமது அயராத உழைப்பை வழங்கிக் கொண்டிருப்பவர்களையும் பாராட்ட நாம் கடமைப் பட்டுள்ளோம். கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக சலியாது

பணியாற்றி வரும் அதிபர் அவர்களையும், நீண்டகாலங்களாக ஆலோசகர்களாக இருந்து பாடசாலையின் சீரான வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்து சேவை செய்பவர்களையும், தொடர்ந்து இத்தனை காலமும் பாடசாலையை நிர்வகித்துக் கொண்டிருக்கும் அனைத்து நிர்வாகிகளையும், பெருமைக்குரிய ஆசிரியப் பெருமக்களையும் நீங்கள் நன்கறிவீர்கள். நன்றி என்ற ஒரு வார்த்தைக்குள் இவர்களது சேவைகள் சுருக்கி விட முடியாதவை. ஏனெனில் எமது அடுத்த தலைமுறையினரை இவர்களிடத்தே நாம் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையின் பேரிலேயே வாரத்தில் ஒருநாள் ஒப்படைக்கின்றோம். தவிரவும் இந்தத் தேசத்தில் மணித்தியாலங்களைக் குரோணர்களாகக் கணக்குப் பார்க்கும் வாழ்க்கைநகர்வு நம்மது. இப்படியான இருத்தலுக்குள் இருந்தும்கூட இவர்கள் ஒவ்வொருவரும் வருடத்தில் குறைந்தபட்சம் 200இலிருந்து 250 மணித்தியாலங்களை நமது சிறார்களுக்காக அர்ப்பணித்துச் சேவை செய்கிறார்கள். அப்படியானவர்களுடன்கூட அவ்வப்போது கருத்து முரண்பாடுகளும், கேள்விகளும் எழுவது இயல்பே. ஆயினும் எமது பிள்ளைகளின் சரியான வளர்ச்சி குறித்த நோக்கிற்காகவும், பாடசாலையின் அபிவிருத்தி கருதியும் எம்மிடையே எழும் முரண்பாடுகளையும், கேள்விகளையும் மனம் திறந்து முன்வையுங்கள், பேசித் தீருங்கள். சனிக்கிழமைகளில் தமிழ்ப்பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும் பிள்ளைகளின் புத்தகப் பையைப் பார்வையிடுங்கள். பள்ளியில் கற்றதை வீட்டிலும் மீட்டிப் பார்க்கச் செய்யுங்கள். இதுவே பெற்றோரின் பெரும் பங்களிப்பாக அமையும்.

எனது இந்த முன்மொழிவையும் மனந்திறந்து பேச வாய்ப்புத் தந்தமைக்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளும், இந்தப் பாடசாலை மேலும் செழிப்புற்று வளர என் வாழ்த்துக்களும்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை.
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்.
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

-மகாகவி சுப்பிரமணிய பாரதி-

பாடசாலை கீதம்

ஆக்கியோன் எ.ஜெயராஜ்

(எங்கள் திராவிடப்பொன்னாடே எ.மெ)

எங்கள் சிறுவர் பாடசாலை
தமிழ் சிறுவர் பாடசாலை
கடல் சூழ் நோர்வேயில்
மலைகளின் நடுவினில்
திகழும் பேர்கனிலே
எங்கள் சிறுவர் பாடசாலை
- எங்கள்

முதியோர் பலரின் முயற்சியிலே – இங்கு
முளைத்தது சிறுவர் பாடசாலை
முதல் முதல் தோன்றிய பாடசாலை – நோர்வே
முழுவதும் தோன்ற வழிவகுக்கும்
மொழி அறிவுடனே மத அறிவையும்
மறவாமல் கற்றனர் பாலர்களே
அன்பிலே நிறைந்து பண்பிலே சிறந்த
ஈழத் தமிழர்கள் வாழியவே
- எங்கள்

வாரம் ஓர்நாள் வருவாரே – அதை
வாழ்வில் என்றும் மறவாரே
தமிழ்மொழி இனிமை அறிவாரே – தமிழ்
இசைபல இங்கு கற்பாரே
நாட்டியத்தாலே நாடகத்தாலே
புகழ் பல சேர்த்தார் சிறுவர்களே
கலை பல தந்து சேவையில் திகழும்
சிறுவர் பாடசாலை வாழியவே
- எங்கள்

சேவை மனம்கொண்ட ஆசிரியர் – பலர்
சேர்ந்து சேவை புரிவாரே
பெற்றோரின் உதவியில் பாடசாலை - இங்கு
பெருமையில் திகழுது பாருங்களே
எண்பத்தேழில் தோன்றியதாலே
ஏற்றம் பெருகும் பாருங்களே
என்றென்றும் வாழ எல்லோரும் வாழ்த்தும்
சிறுவர் பாடசாலை வாழியவே
- எங்கள்

தலைமை ஆசிரியரிடமிருந்து

எமது தமிழ் சிறுவர் பாடசாலையின் நோக்குகளுக்கமைய 20 ஆண்டுகளுக்கும் மேலாக என்னுடன் இணைந்து அயராது உழைத்து வரும் ஆசிரியர்கள் பெற்றார்கள் மாணவர்கள் அனைவர்க்கும் இன்று இருபதாவது ஆண்டை கொண்டாடும் வேளையில் முதற்கண் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

- எமது சிறுவர்கள் தங்களுக்குள் பரஸ்பர உறவுகளை எற்படுத்தவும்
- தமது அடையாளத்தை அறிந்து கொள்ளவும், அதனைப்பேணிப்பாதுகாக்கவும்
- தமது இனத்தையும், பண்பாட்டையும், தமது மொழி, கலை கலாச்சாரத்தை அறிந்து கொள்ளவும் அவற்றைப்பேணிப்பாதுகாக்கவும்
- தாம் வாழும் நாட்டையும் மக்களையும் அறிந்து கொள்ளவும் நேசிக்கவும் அவர்களுக்கும் தமது கலை கலாச்சாரத்தை அறிமுகப்படுத்தி அவர்களுடன் பரஸ்பர உறவுகளை ஏற்படுத்தும் வகையில் எமது எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டும்

இந்நோக்குகளையெல்லாம் நடைமுறைக்கு கொண்டுவருவதற்காக திரு அன்ரனி ராஜேந்திரம் அவர்கள் அயராது உழைத்து பேர்கனில் வாழ் அனைத்து தமிழ்மக்களினதும் ஒருமித்த ஆதரவுடன் இப்பாடசாலையை ஆரம்பித்து வைத்துதார். அவரது ஆசிகளுடன் பேர்கன் மாநகரில் பங்குனி 1987ல் வட ஐரோப்பாவிலேயே முதலாவது தமிழ் சிறவர் பாடசாலை தோன்றியது. இன்று 20வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் பாடசாலையின் வளர்ச்சியினை மிகவும் சுருக்கமாக குறிப்பிட விரும்புகின்றேன்.

- எமது பாடசாலை 20 ஆண்டு காலத்தில் பலதரப்பட்ட சிரமங்களையும் தாண்டி வந்துள்ளதென்பது மறுக்கமுடியாததொன்றாகும்.
- நோக்குகளுக்கமைய எமது சிறுவர்களின் மனப்பக்குவத்துக்கேற்ப கல்வியை பயிற்றி வருகின்றோம். பெற்றோரின் விருப்புக்கமைய தமிழ்க்கல்வியினை பாடத்திட்டங்களுடன் சிறுவர்களுக்கு பயிற்றி வருகின்றோம்.
- பேர்கனில் உள்ள பொதுநலசேவை அமைப்புக்கள், பாடசாலைகளுக்கு எமது சிறார்கள் எமது கலை நிகழ்ச்சிகளை காலத்துக்கு காலம் அறிமுகம் செய்து வருகின்றார்கள்.
- எமது பாடசாலையின் முதல் மாணவர்களின் பிள்ளைகள் இங்கு கல்வி கற்பதும், முதல்மாணவர் ஆசிரியராக கடமையாற்றுவதும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைகிறது. எனது கடமைக்காலத்தில் இதனை அனுபவிக்க கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியானதாகும்.

பாடசாலை ஆரம்பத்தில் குறுகிய காலம் எமது பாடசாலை Nygård skole மண்டபத்தில் பாடவகுப்புக்களை நடாத்துவதற்கு உதவிசெய்தது. பின்பு புனித பவுல் பாடசாலையில் கல்வி வகுப்புக்களை நடாத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டது. இவற்றுக்காக பாடசாலையின் நிர்வாகங்களுக்கும் மற்றும் நிதி உதவி வழங்கும் பேர்கன் மாநகரசபை மற்றும் கோர்டலாண்ட் அரச அதிபர் அனைவர்க்கும் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் பெற்றார்கள் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Sherrene Santhiapillai
Rektor
Bergen Tamilske Barneskoles

Bergen Tamilske Barneskoles grunnlegger het Anthony Rajendram. Han hadde et ønske om å starte en skole for tamiler, som kunne hjelpe dem med å ivareta den tamilske kulturen, samtidig som det skulle hjelpe dem å integreres i det norske samfunnet. Han mente at kunnskap om foreldregenerasjonens kulturbakgrunn er en viktig faktor for en vellykket identitetsbygging for barn som vokser opp i Norge. Nettopp denne ideen har skolen jobbet ut ifra i siden skolen ble grunnlagt i Mars 1987.

Den gang startet skolen opp med 6 elever og 2 lærere. Siden har det gradvis økt med både elever og lærere. Per dags dato har skolen 70 elever og 14 lærere. En slik innsats krever innsats og samarbeid. Jeg vil derfor takke mine medarbeidere, foreldre og elever for deres bidrag og vilje for å opprettholde og oppnå skolens mange formål gjennom 20 år.. sammen har vi formidlet tamilsk kultur til det store fellesskapet som vi er en del av. Dette har vi klart gjennom kulturelle innslag og foredrag i offentlige skoler og barnehager, Redd Barnas arrangementer, FN dager og andre arrangementer hvor vi har blitt spurt om å bidra.

På godt og vondt har vi stått sammen i fellesskap, med et mål om å bygge og utvikle skolen. Jeg vil i dag tørre å påstå at det har vært en vellykket prosess. Det vil jeg si med tanke på at jeg gjennom 20 år som rektor har vært så heldig å få kunne oppleve hvordan Bergen Tamilske Barneskoles formål har hatt den virkningen vi har ønsket. Ved å se hvordan tidligere elever nå er lærere ved skolen, mens deres barn er elever på samme skole er, for meg, en glede og bekreftelse på at skolen har gjort og fortsatt gjør en viktig jobb.

Jeg vil også takke Bergen kommune, Hordaland Fylkeskommune og St. Paul Skole for deres samarbeid og støtte. Dere har gjennom disse årene, hatt en helt avgjørende rolle for at vi kan gjøre den jobben vi gjør.

Bergen tamilskole – verdt en feiring

-Sigrun Rajendram-

Et jubileum er en gylden anledning, ikke bare ti å feire, men til å se tilbake, ta opp status og tenke over hvor veien videre går. Slik er det også nå når Bergen Tamilskole, litt på etterskudd, feirer sine 20 år som kulturformidler, sosial møteplass og integreringsplattform for en hel generasjon av tamiler her i byen. Når vi vet at dette tilbudet har vært drevet på frivillig basis alle disse årene, så skjønner vi at skolen har vært en viktig faktor i miljøet. Men hvordan startet den? Hva var tanken bak? Og hva er fremtiden for denne skolen?

La oss ta et lite tilbakeblikk. Det var på 1970-tallet at tamiler fant veien til Norge for alvor. Fiskeriprosjektet Cey-Nor hadde for lengst satt Norge på kartet for befolkningen i det nordlige Sri Lanka, og en stadig mer anti-tamilsk politikk på hjemmebane fikk mange til å søke seg utdanning og jobb her. Med krigen på 1980-tallet kom flyktningstrømmen, og den norske tamilkolonien økte i antall. Mange unge familier strevde med å gjenskape en identitet for seg selv og barna sine i Norge, fjernt fra det nettverket de var vant til. Dette så Anthony Rajendram, Cey-Nor's initiativtaker, internasjonalist, Norges-venn og selv tamil, bosatt i Bergen. Han hadde også dradd ut i verden som ung og fikk erfare hvor viktig egen kulturell ballast er i møtet med nye folk og steder. Hva om det tamilske miljøet gikk sammen om å ta utfordringen med å finne seg til rette her, tenkte han. Med det spørsmålet var ideen til Bergen Tamilskole født, og i mars 1987 var den lokalisert en kort periode i lokaler som Nygård skole stilte til rådighet og siden har skolen undervist i lokaler som St. Paul skole stilte til rådighet.

Visjonen var en skole som skulle være et supplement til foreldrenes innsats på hjemmebane. Opplæring i tamilsk musikk, dans og språk skulle og samvær med andre i samme situasjon skulle gi barna kunnskap om fars og mors bakgrunn, og en trygg plattform å orientere seg fra i møtet

den norske hverdagen utenfor hjemmets fire vegger. Skolen skulle bygge på de samme pedagogiske prinsippene som barna møtte ellers i skolehverdagen sin og være i åpen dialog med storsamfunnet. Med andre ord var det ikke snakk om en ensidig dyrking av tamilsk egenart og verdensanskuelse, men å utvikle tokulturelle ungdom med evne og vilje til aktiv deltakelse i samfunnet.

Om Bergen Tamilskole er et resultat av én manns visjon, så er det en trofast kjerne av utrettelige ildsjeler, med Sherrene Santhiapillai i spissen, som har stått for det faglige og pedagogiske tilbudet, og som har gjort at barn og unge har fortsatt å komme dit, lørdag etter lørdag, skoleåret igjennom. Den innsatsen er verdt en fest! Og i alle disse årene har foreldre og andre støttepersoner stilt opp for skolen og de ideene den bygger på. Det skal vi også feire.

Mye har selvsagt forandret seg på 20 år. Pionerene fra 80-tallet er blitt besteforeldre, og nå er det en ny generasjon med unge foreldre som avgjør hvilke tilbud barna deres skal ha. De står ikke lenger så alene, men tilhører et miljø som har vokst seg stort nok til å være sosialt selvforsynt og til å gjenskape et slags lite Tamil Eelam her i Bergen. De har vokst opp i skyggen av en lang og bitter konflikt, og det har formet den enkeltes innstilling til det å være tamil i Norge. Noen har blikket rettet mot en mulig fremtid i hjemlandet, mens andre konsentrerer seg om å bygge en tokulturell tilværelse for seg og sine her. Andre igjen famler og vet ikke hvilken vei familien skal velge. Men uansett ståsted så har de alle barnas beste for øye.

Når de sentrale personene bak Bergen Tamilskole etter hvert takker av, er det naturlig og helt som det skal være. Nye krefter skal utvikle den i tråd med egne erfaringer, men skolens skjebne avhenger av at en er tro mot de visjonene den ble bygget på og av at det finnes nok voksne som ser betydningen av å bevare den som integreringsplattform for en ny generasjon unge tamiler. Samtidig med at jeg ønsker til lykke med 20 viktige år er det utfordringen jeg vil gi videre til dagens foreldregenerasjon.

Februar 2008

BERGEN KOMMUNE

BYRÅDSAVDELING FOR OPPVEKST
Bergen Rådhus
Postboks 7700, 5020 Bergen
Telefon 55 56 60 30
Telefaks 55 56 74 40
barnehage.skole.idrett@bergen.kommune.no
www.bergen.kommune.no/

Bergen kommune gratulerer med 20-års jubileet!

Bergen er en flerkulturell by hvor mennesker fra mange ulike deler av verden har valgt å bosette seg. Et mangfoldig og vitalt samfunn med mennesker som engasjerer seg for å gi barn og unge best mulige oppvekstvilkår er av avgjørende betydning for byen. Bergen kommune verdsetter slikt engasjement høyt og ønsker å være en aktiv støttesspiller og samarbeidspart for denne typen samfunnsengasjement.

Tamilsk Barneskole er blitt et begrep både for det tamilske miljøet i byen, samt for mange andre. I vår omskiftelige verden ser vi at det for mange barn og unge er viktig å kjenne sine "røtter", å vite hvor en kommer fra. Grunnleggende kunnskaper i morsmål og tradisjonelle kulturelle skikker er viktig for å oppnå dette. Det er også viktig å være akseptert i det samfunnet en lever i. Derfor er det svært positivt at Tamilsk Barneskole også bidrar som en aktiv kunnskapsformilder med informasjon om sin kultur og sine skikker i ulike sammenhenger, som ved familiekonserter i Grieghallen og markeringer av egne festdager og tradisjoner i byen.

Bergen kommune, ved byrådsavdeling for barnehage og skole, gratulerer Tamilsk barneskole - Bergen med 20 års jubileet, og ønsker dere lykke til videre med det flotte arbeidet og engasjementet dere har!

Med vennlig hilsen
Byrådsavdeling for barnehage og skole
Anne-Marit Presterud
Anne Marit Presterud
Kommunaldirektør

Hilde J. Valestrand
Hilde Jorun Valestrand
Rådgiver

St. Paul skole

Katolsk grunnskole

Org.nr.: 971 561 688
Telefon: 55 21 59 00
Telefax: 55 21 59 01

E-post: skolen@stpaul.no
URL: www.stpaul.no
Bankgiro: 3625.07.72542
Postgiro: 0801 5707799

Christiesgate 16
5015 Bergen

Gratulerer!

20 år er tid for å markere. Ikke minst for å markere en skole – endatil en frivillig skole som verken har egen skolebygning eller offentlige tilskudd sikret gjennom skolelovverk. Bergen tamilske barneskole er noe annet enn en tradisjonell norsk barneskole.

I en gammel handels-, sjøfarts- og Hansastad som Bergen, har vi mange hundre år vært vant med at her kom langveisfarende fra inn og utland som slo seg ned. Bergen er full av tradisjonsnavn som viser stamtavler fra andre steder og land. I perioder har "innvandrerne" kunnet bli oppfattet som noe ubehagelig eller til og med truende, men dette har glidd over. I dag er det nettopp at Bergen er preget av mange kulturer vi er stolte over. Vi liker at vår by har mange og ulike tradisjoner og en særpreget dialekt – i det hele at vi *e nokke for oss sjøl.*

Når Bergen er blitt som den er, er en viktig grunn at vi har tatt imot impulser fra andre land og andre forhold. Hadde vi krevd at alle som kom hit snarest skulle bli nettopp som oss som var her fra før, ville byen vært langt kjedeligere.

I dette ligger det et dobbelt krav til begge parter. Kravet om å opprettholde egne røtter og kravet om å være åpen for nye ideer og inntrykk.

På tamilskolen lærer barna tradisjoner fra sitt opprinnelsesland, dvs. oftest er det vel foreldrenes opprinnelsesland. De lærer om forholdene der og respekt for sine foreldre og forfedres kultur. I den store smeltedigelen USA, har man lenge visst at det i regelen er de som opprettholdt kontakt og som vedlikeholdt sine kulturelles røtter, som ble best integrert og som ble mest effektive i det amerikanske samfunnet. Vi vet at dette også har med psykisk helse å gjøre. Rotløs ungdom har øket risiko for å miste kontroll over eget liv og mulighet til god samfunnsinnsats. Tamilskolen er med å gi tamilske barn sunne røtter. Det er det ene foreldre skal gi sine barn: *røtter*.
Det andre foreldre skal gi sine barn er *vinger*. Det gjøres ved å hjelpe barn til å være åpen for nye inntrykk og til å utforske nye muligheter. Bergen tamilskole er åpen for at barna også må lære å mestre og sette pris på de forhold den eksisterende kulturen her bygger på.
På St. Paul skole kjenner vi tamilskolen. Vi har svært mange felles elever. Sentrale ledere i tamilskolen er også direkte knyttet til skolen. Vi har til og med felles adresse, ved at tamilskolen er med å fylle skolebygget med liv og kultur mange kvelder og fridager. Det medvirker til et rikere miljø på St. Paul skole.

Bergen tamilskole føyer seg godt inn i den bergenske tradisjon. Tamilene *er noe* og *har noe*, en verdifull kultur man kan bygge på! Denne kulturen er ikke bare for dem selv, men noe de gjennom tamilskolen også deler, med de som alt er mange generasjoner bergensere, og med andre innflyttere – om de så er fra Østlandet eller andre verdensdeler.
Bergen tamilskole er med å gjøre byen rikere, tilfører byen nye impulser og dermed ennå mer *typisk Bergen.*

Gjermund Høgh
Rektor, St. Paul skole.

HORDALAND
FYLKESKOMMUNE

Kultur- og idrettsavdelinga

Tamilsk Barneskole, Bergen v/ St Paul Skole
Christies gate 16
5015 BERGEN

Tamilsk barneskole Bergen, ein skole som byggjer bru!

Skulen som no jubilerar har mellom anna som føremål og oppgåver å byggje bru mellom norske og tamilske born, å gje borna høve til å ta vare på sin tamilske identitet og lære dei om samkjensle.

Tamilsk barneskole Bergen har gjennom mange år fått stønad til både drift og til tiltak knytt til morsmål, religion og kulturelle aktivitetar. Dette har dei fått gjennom den statlege tilskotsordninga til drift av lokale innvandrarorganisasjonar og frivillig verksemd som Hordaland fylkeskommune forvaltar.

Mål for tilskot til drift av lokale innvandrarorganisasjonar og frivillig verksemd i fylket er:

- å medverke til kontakt, samhandling og nettverksbygging mellom personar med innvandrarbakgrunn og resten av befolkninga
- å fremje toleranse mellom ulike grupper av befolkninga
- å motverke rassisme og diskriminering
- å rekruttere fleire personar med innvandrarbakgrunn til frivillige organisasjonar og frivillig verksemd.

Tamilsk barneskole Bergen er ein laurdagsskole for Tamilske born, også dei som har norsk mor eller far. Skolen har gjennom vedtekter ei medveten og god haldning til integrering i samfunnet, og medverkar gjennom dette til å fremje toleranse mellom ulike grupper av befolkninga.

Hordaland fylkeskommune vil ynskje Tamilsk barneskole Bergen hjarteleg til lukke med sitt 20-års jubileum!

Vennleg helsing

Ingebjørg Astrup

Ingebjørg E. Astrup
fylkeskultursjef

Charlotte Espeland

Charlotte Espeland
rådgjevar

Besoksadresse: Agnes Mowinckelsgt. 5 - Postadresse: Postboks 7900. 5020 Bergen - Telefon 55239185 - Telefaks 55239199
Direkte telefon: E-postadresse:
Bankgironr. 5201 06 74239 - Foretaksnr. NO 938 626 367 mva.

மதமும் வாழ்க்கையும்

அருட்பணி. ஜெகத் குணபாலா அ.ம.தி.

மனிதர் அனைவரும் சமுகப்பிராணிகளாவர். இந்த சமுகப்பிராணிகள் சமுகத்தில் மாண்புடனும், அறிவுடனும், ஒழுக்கத்துடனும், விசுவாசத்துடனும் வாழ்வதற்கு மதங்கள் பல்வேறுவகையில் வழிகாட்டிகளாக இருக்கின்றன. ஆகவே மனிதர் சமுகத்தின் உறுப்பினர் என்ற முறையில், மதத்தைப்பரப்பவும் காக்கவும், மத உண்மைகளைப் போதிக்கவும் அனைவரும் உரிமை கொண்டுள்ளனர். ஆனால் மதத்தைப்பரப்ப முழுச்சுதந்திரம் இருந்தாலும் வலுக்கட்டாயமாக மனம் மாற்றுவதோ, அல்லது பொய்யான பரப்புரைகளை மதங்களின் பெயரால் சமுகங்களில் குடும்பங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதோ பாரியகுற்றமும் கண்டனத்துக்குரியதுமாகும்.

திருச்சபை கிறீஸ்துவைப் பின்பற்றி ஆரம்பத்திலிருந்தே முறையான அரசியல் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு வந்துள்ளது. கடவுளின் வார்த்தையை அறிவித்து மக்கள் கிறிஸ்துமீது நம்பிக்கை கொள்ள அமைதியான வழிகளில் தூண்டியது. இதனால் மனிதவாழ்க்கையிலே ஆன்மீகத்தில் ஆர்வமும் வாழ்க்கையிலே ஒழுக்கமும் அடிமைப்பட்ட மக்களுக்கு உரிமைவாழ்வும், அறிவு ரீதியான வளர்ச்சியும் ஏற்பட்டது. உலகில் கிறீஸ்துவை அடையாளப்படுத்துகின்ற திருச்சபை அரசியல் அதிகாரம் மனிதமாண்பை அழிக்கமுற்பட்ட நேரத்தில் எல்லாம் அதனை எதிர்த்து மக்களுக்காக, தான்போதித்த உண்மைகளுக்காக தன் உயிரையே பணயம் வைக்கவும், துணிந்து நின்றது. மதங்கள் அல்லது மதத்தலைவர்கள் எப்போது ஆட்சியாளர்களின் அல்லது அரசியல் வாதிகளின் ஆளுகைக்குள் உட்படுகின்றனவோ அன்றே அம்மதத்தலைவர்கள் ஆன்மீகத்தை இழக்கின்ற நேரமாகிறது. இன்று உலகை நோக்குகின்றபோது அரசியல் என்பது சுயநோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு செயற்படுகின்றது. இதனால் எந்த மக்களால் அரசியல்வாதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அதேமக்களை துன்புறுத்தும் நிலை, அழிக்கும் நிலை இன்று உலக அரசியலில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதேவகையான தொற்று நோய் இன்று மதங்களுக்குள்ளும் ஊடுருவியிருக்கின்றது. மதங்கள் மனிதனை நேரிய பாதையில், உண்மையின் பாதையில் வழிநடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதொன்று, ஆனால் இன்று சிலமதங்கள், மதத்தலைவர்கள் மதத்தின் பெயரால் மனிதப்படுகொலைகளையும், மதவெறியையும், சாதிய கொடுமைகளையும், வேறுபாடுகளையும், அடக்கு முறைகளையும், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற நிலைகளையும் உருவாக்கிவருகின்றன. இதனால் ஒரு சில மதத்தலைவர்கள் மதத்தின் பெயரால் மனித வாழ்க்கையை சீரழிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இதனால் மதங்களில் மனிதர்க்கு வெறுப்பு ஏற்படுகின்ற நிலை தற்போது உருவாகிவருகிறது.

மதங்கள் தன்னகத்தே நன்று. ஆனால் அம்மதங்களை ஆள்பவர்கள் தன்னகத்தே தீயவர்களாகவும், மதக்கோட்பாடுகளுக்கு எதிரானவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்களில் அநேகர் மதக்கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அறியாமல் இருப்பதும் நாஸ்திகராக இருப்பதும் மனிதவாழ்க்கைக்கும் அதன் உண்மை தூய்மை அன்பு, நோக்கிய பயணங்களுக்கும் தடையாக இருக்கின்றார்கள். சமுதாயத்தை அமைப்பதிலும் புனிதத்தை நோக்கிய மனிதசெயல்கள் அனைத்துக்கும் எழுச்சியூட்டுவதிலும் தங்கள் மதக்கோட்பாடுகளை உரிமையோடு எடுத்துக்காட்டுவதற்கு மதங்களுக்கு உரிமையுண்டு. ஆகவே மனிதர் தம் நிறைவை முழுமையாகவும் எளிதாகவும் அடைய மதங்கள் உதவுகின்றன. ஏனெனில் மதங்களில், அதன் கோட்பாடுகளில் பொதுநலம் அதிகம் பேணப்படுகின்றது. இப்பொதுநலம் சமுகத்தில் மனிதன் உரிமையுடன் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்கின்றது.

ஆகவே ஒட்டு மொத்தத்தில் மதங்களும் அதன் கோட்பாடுகளும் உண்மை நீதியில் மனிதர் ஒன்றுபட்டு ஒழுங்குடன் மனித மாண்பை மதித்து வாழ்வதற்கு உதவிபுரிகின்றன என்பதே அடிப்படை உண்மையாகும். மனித குடும்பம் மதக்கோட்பாடுளை போதனைகளை சமுதாயத்தில் சரியாக கடைப்பிடிப்பதன் வழியாக எல்லாருடைய கடவுளும் தந்தையுமானவர் அதனைச் சாலச்சிறந்ததும் முடிவற்றதுமான கடவுளின் பிள்ளைக்குரிய பெருமையின் விடுதலைக்கு (உரோ 8:21) கிறீஸதுவின் அருளாலும் தூயஆவியின் ஆற்றல்லாலும் கொண்டுவருவாராக.

இன்றியமையாதது...

புலம் பெயர்ந்துள்ள தமிழரின் பிள்ளைகள்
தமிழைக் கற்பது இன்றியமையாதது.

-ஆ.விவேகானந்தன்-

தமிழ்த் தாயகங்களிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் மேனாடுகளில் வளமுடன் வாழ்கின்றார்கள். மேலைத்தேசக் கலாச்சாரம், கீழைத்தேசக் கலாச்சாரம் என்பவற்றைக் காண்கின்றார்கள். மேலைத் தேசத்தாருக்கு அவர்களது வழிமுறைகளால் வந்த நாகரீகம் சிறப்பாயுள்ளது. தமிழர்களுக்குத் தமிழ் கலாச்சாரத்தின் வழி முறைகளால் வந்த நாகரீகம் உயர்வாயுள்ளது; கண்ணியமாய்த் திகழ்கிறது. இரண்டு கலாச்நாரங்களிலும் நன்மைகளும் தீமைகளும் உண்டு. “வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையதுயர்வு” என்னும் வள்ளுவப் பெருந்தகையாரின் திருக்குறளுக்கு ஏற்றாற்போல் உயர்வானதையே என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். கலாச்சாரம் என்றால் பண்பாடாகும்; பண்பாடு என்றால் நல்ல பழக்க வழக்கங்களாகும். தமிழ் கலாச்சாரமானது தமிழரின் வாழ்வியலாலும் தமிழ் மொழியாலும் சிறப்படைகின்றது. செந்தமிழானது அறிஞர்களின் அறிவுச் செழுமையும் வளமும் பெற்றுள்ளது. அத்தகைய அரும் பெருந் தமிழ் மொழியைப் புலம் பெயர்ந்த தமிழரின் பிள்ளைகள் படித்துப் பயன் பெற வேண்டும்; கனிவாய் வளர வேண்டும். கல்வியின் பயனும் பண்பும் அன்பின் உச்சமாகவுள்ளன. பாரம்பரியம், பண்பாடு, நாகரீகம் முதலியன கற்கும் மாணவச் செல்வங்களுக்கு ஆக்கமளிப்பனவாகும்.

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த தமிழறிஞர்கள் எடுத்துக் கூறிய பண்பும் பட்டறிவும் பாரம்பரியப் பண்பாடாகத் துலங்கிறது. தமிழ்ப் பண்பாட்டின் புதுமைகளை அறிவதற்கு அடித்தளமாக திகழ்வது தீந்தமிழாகும். முன்னோரின் பண்பாட்டுச் சிறப்புகளும் உயிரியல் பண்புகளும் இளந்தலைமுறையினரின் உயிரணுக்களில் பின்னிப் பிணைந்துள்ளதாக அறிவாராய்ச்சி வல்லுனர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். மனித வளர்ச்சியின் பெருமைகள் பைந்தமிழிலுண்டு. “அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே” என்னும் நன்நூற் பாவின் கருத்தானது கல்வியின் அறிவை நூல்களின் வழியாகப் பெறுவதோடு தருமம், பொருள், இன்பம், கடவுளைச் சேரும் பேறு ஆகியவற்றையும் பயனாகப் பெயறலாம் என்றெடுத்துரைக்கின்றது. தமிழில் கல்வி கற்ற பிள்ளைகளால் வெவ்வேறு பாடங்களின் கல்விப்புலமைகளையும் இலகுவாகப் பெறலாமென்று ஆய்வாளர் கூறியுள்ளனர். இன்பத்தமிழைப் படிப்பவர்களுக்கு நுட்பமான அறிவு எளிதாக கிடைத்துவிடும். தாயகங்களிலுள்ள தமிழரோடும் மேனாடுகளிலுள்ள தமிழரோடும் கதைத்துப் பேசுவதற்க்காகத் தமிழ் கற்பது அவசியமாகும். பத்து வயதுக்கு மேற்பட்ட சிறார்கள் பதினொரு மொழிகளைப் படிக்கும் பக்குவமுண்டென்று நிபுணர் கூறியுள்ளனர்.

உலகில் ஆயிரத்தெண்ணூறு மொழிகளுள்ளன; சிறப்பு மொழிகளாக எட்டுள்ளன; இன்பத் தமிழும் சிறப்பு மொழிகளிலொன்றாக துலங்குகின்றது. தேன் தமிழின் செம்மொழிச் சிறப்பு போற்றுதற்குரியது. அறம், அறிவு, அன்பு, இரக்கம், ஈகை, நீதி, பொறுமை, மானம், வீரம் முதலியன தமிழ்ப்பண்பாட்டின் விழுமியங்களாகும்; கண்ணியத்துக்காகவும் மானத்துக்காகவும் உயிர்களைத் தியாகம் செய்யும் பெருமையை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் வியப்பாகும்.

பல மொழிகளைக் கற்ற சுப்பிரமணிய பாரதியார் தமிழின் பெருமையையெண்ணிப் பெருமிதம் கொண்டார். ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்’ . . . என்றும் ‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை’ . . . என்றும் ‘செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே’ . . . என்றும் ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு’ . . . என்றும் ‘தெள்ளுற்ற தமிழமுதின்

சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக்கண்டார்' என்றும் புரட்சிக் கவிஞர் பாடி மகிழ்ந்தார். தீந்தமிழைக் கற்கக் கற்கக் கடவுளைக் கண்டு களிப்போரின் பேரானந்தத்தையுத்துணரலாம் என்றும் பாரதியார் அதிசயித்தார். 'உற்றவர், நாட்டவர், ஊரார் - இவர்க்கு உண்மைகள் கூறி இனியன செய்தல் நற்றவம் ஆவது கண்டோம் - இதில் நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை' என்றும் 'ஊருக்குழைத்திடல் யோகம்; நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம், போருக்கு நின்றிடும் போதும் - உளம் பொங்கல் இல்லாத அமைதிமெய்ஞ் ஞானம்' என்றும் புதிய பாடல் பகுதியில் தவத்தையும் யோகத்தையும் யாகத்தையும் ஞானத்தையும் விளக்கமான புதுமையுடன் கூறிய மகாகவி பாரதியாரின் திறன்கள் வாழ்த்துக்குரியனவாகும்.

திருவள்ளுவரின் திருக்குறள் உலகிலுள்ளோர்க்குப் பயனாகின்றது, எந்நாட்டவர்க்கும், எம்மொழியினர்க்கும், எவ்வினத்தவர்க்கும், எக்கட்சியினர்க்கும், எக்கொள்கையினர்க்கும், எக்காலத்தவர்க்கும், எவ்வழியினருக்கும் பொது வேதநூலாகவுள்ளது; நாற்பத்திரண்டாயிரத்து நூற்றுத்தொண்ணூற்று நான்கு எழுத்துகளும், ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறட்பாக்களும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களும் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலும் திருக்குறளிலுள்ளன.

ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நீதி நூற் செய்யுட்கள் மிகப் போற்றுதற்குரியன; படித்துப் பயன்பெற வேண்டும்.

G.U.போப், வெஸ்லியன் சங்கத்தாரால் சமயத்தொண்டு செய்வதற்காகத் தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பெற்றவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தமிழைத் தெளிவாகக்கற்றுத் திருக்குறளையும் திருவாசகத்தையும் நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர். தாம் இறந்த பின் தமது சமாதிக் கல்லில் 'Rev. G.U. Pope a student of tamil literature' என்று பொறிக்குமாறு வேண்டிக்கொண்டவர். அவரது கல்லறையில் அவ்வாக்கியத்தை இன்றும் காணலாம்.

கொன்ஸ்டன்டைன் பெஸ்கி என்பவர் வீரமாமுனிவரென்று அழைக்கப்பட்டார்; இத்தாலி நாட்டவராவார்; 1680-1750 காலப்பகுதியில் வாழ்ந்தவர்; 'தேம்பாவணி' என்னும் காப்பியத்தையும் 'வேதவிளக்கம்', 'சித்தேரி அம்மன் அம்மானை', 'அடைக்கல நாயகி வெண்கவிப்பா', 'அடைக்கல மாலை', 'திருக்காவலூர்க் கலம்பகம்', 'அன்னை அழுங்கல் அந்தாதி', 'பரமார்த்த குருகதை' முதலிய நூல்களையும் ஆக்கினார். 'தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கண நூலையும் 'சதுரகராதியையும்' அழகுற எழுதினார். திருக்குறளை லத்தீன் மொழியில் இவர் பெயர்த்தெழுதினார்.

கால்டுவேல் அறிஞர் மேனாட்டிலிருந்து தமிழகம் சென்று தமிழைத் தெளிவாகக் கற்றார். தமிழின் பெருமையை உணர்ந்தார்; தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழியென்று கண்டார்; 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் ஓர் ஆராய்ச்சி நூலை எழுதினார். தமிழ் மொழியின் செம்மையையுலகில் பரப்பினார்.

வால்மீகி ராமாயணக் கதையைத் தமிழ் கலாசாரத்திற்கு ஏற்ற முறையில் இராமாயணமாக பெயர்த்தெழுதிய கம்பர் பெருமான் பாராட்டுக்குரியவர். 'விருத்தப்பாவிற்கு உயர் கம்பன்' என்றும் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்ற பழமொழியும் பாராட்டுக்குரியன.

வியாச முனிவராலாக்கப்பட்ட மகாபாரதக் கதையைத் தமிழில் வில்லிபுரத்தாழ்வார் மொழி பெயர்த்தெழுதினார். இராமாயணமும் மகாபாரதமும் தமிழில் பெருங் காப்பியங்களாகவுள்ளன. சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் சிறு காப்பியங்களாகும். நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணையம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை ஆகியன பதினெண்கீழ்கணக்கு நூல்களாகும்; தித்திக்கும் தீஞ்சுவை இலக்கியங்களாகும்.

அகத்திணையையும் புறத்திணையையும் மிகுதியாகப் பாடி அவற்றில் ஆட்சி பெற்றிருந்த தமிழ்ப்புலவர்களின் கவிதைத் துறையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. ஆன்மீக அறிவின் அக விருத்தியிலே அகத்திணையை உணர்ந்து குறித்த கடவுள் நிலைகளில் தமக்கு விரும்பிய கடவுளொன்றைச் சிந்தையிலேற்றிப் பாடும் மரபு போற்றத்தக்கது. தத்துவ ஞானத்தின் வளர்ச்சியானது பூத்துக்குலுங்கும் மரபாகத் திகழ்ந்தது. பிரபந்த இலக்கியங்கள் தொண்ணூற்றாறாய் விரிவடைந்த நிலை அதுவாகும்.

ஐந்து நிலங்களில் வாழ்ந்த இன்பத் தமிழர்கள் அவ்வவ் நிலங்களுக்குரிய பெருமைகளையும் சிறப்புகளையும் பெற்றுள்ளனர். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியென்றும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லையென்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமென்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலென்றும், முல்லையும் குறிஞ்சியும் கோடையால் மாறிய இடமும் பாலையென்றும் புலவர்களால் புகழப்பட்டனவாம்.

'புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல கால வகையாலே' என்று பவணந்தியார் பகர்ந்தார். பண்பாடு என்று புகழப்படும் நல்ல பழக்க வழக்கங்களின் தூய்மை அல்லது புனிதமென்பது காலத்துக்கு ஏற்ற முறையில் ஒழுங்காக்கப்படவேண்டும். மனித வளர்ச்சியின் மென்மையும் மேன்மையும் மேலோங்க மேலோங்கப் பின்னடைவுகளும் மூடப்பழக்கங்களும் சூழ்நிலைக்கேற்றவாறு விலக்க வேண்டும்; இந்நிலையே உண்மையான உயர்ந்த நாகரிகமாகும். பக்தி நூல்கள் நிறைந்த தமிழைப் பக்தி மொழியென்று மொழியாராய்ச்சியாளர்கள் புகழ்ந்தார்கள். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்னும் திருமந்திரப் பாடலில் உள்ள தமிழ் என்பது அன்பு என்ற கருத்தைத் தெரிவிக்கின்றது. திருமூலர் எழுதிய திருமந்திரமாலையானது மூவாயிரம் திருமந்திரப்பாடல்கள் உடையதாகும். ஓர் ஆன்மீக நூலாகும்; அன்புதான் தெய்வம் என்று திருமந்திரம் கூறுகிறது. மனிதனுக்குள் ஆண்டவனைக் கண்டு களிக்கலாமென்கின்ற யோக முறையாகும்; இலகுவான பயிற்சித் தேடல்கள் வாயிலாக எடுத்துரைக்கும் திருமந்திரமாலை, ஆன்மீக நாட்டமுள்ளோர்களாலும் அறிவு படைத்தோராலும் வரவேற்கப்படுகின்றது. ஆய கலைகள் அறுபத்து நான்கையும் தெட்டத்தெளிவாக்கும் நூற்களஞ்சியங்கள் அளப்பிலவாயுள்ளன.

இலக்கிய நூல்களுக்கு இலக்கண நூலாகத் தொல்காப்பியம் உள்ளது; தொல்காப்பியரால் எழுதப்பட்டது; முதல் நூலாகவுள்ளது. இதற்கு வழிநூலாக நன்னூல் இலக்கணமுள்ளது. நன்னூல் பவணந்தி முனிவராலாக்கப்பட்டது. இலக்கியம் என்றால் மனித வாழ்க்கையின் சிறப்பு நிலைகளை விரிவாக்கும் நூலாகும்; இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இலக்கியமாகும்.

அறிஞர்களின் நூல்கள் இலக்கியங்களாகும். இலக்கணம் என்றால் ஒழுங்கு முறை அல்லது வரையறை என்பதாகும். மொழியின் அழகு நேர்த்தியாக விளங்குவதற்குக் கொடுக்கப்படும் கட்டுப்பாடு இலக்கணமாகும். எள்ளிலே எண்ணை எடுப்பதுபோல இலக்கியத்திலிருந்து இலக்கணமெடுக்கப்படுமென்று நன்னூலில் மொழியப்படுகின்றது.

தமிழுக்கு அமுது என்று பேர்; அந்தத் தமிழெங்கள் உயிருக்கு நேர் என்று பாரதிதாசன் பாடியுள்ளார்; பாரதிதாசனுக்கு கனக சுப்பரத்தினம் என்கிற இயற்பெயருண்டு; சுரதாசன் என்ற புனை பெயருமுண்டு. 'ஓடையிலே என் சாம்பல் ஓடும்போதும் ஒண்தமிழே சலசலத்து ஓட வேண்டும்' என்னும் பாடல் அவரதாகும்; புரட்சியான தமிழ்பற்றையதிகமுடையவராகப் புரட்சிதாசனுள்ளார். தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு, அமிழ்தம் அவனது மொழியாகும், அன்பே அவனுடைய வழியாகும் என்று நாமக்கல் கவிஞர் பாடினார்.

தமிழறிவாளர்களால் வளமடைந்த வண்ணத் தமிழைப் படித்துப் பயன் பெறுவோம். தமிழை மேம்படுத்திய மேனாட்டு அறிஞர்களைப் புகழ்வோம். 'அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்' என்னுந் திருக்குறளை ஏத்திப் போற்றுவோம்; உண்மைகள் கூறியினியன செய்வோம்; கலாச்சாரத்தைக் கட்டிக்காப்போம். பெற்றோரைத் தெய்வமாக வணங்குவோம். தாய் சொல்லைத் தட்டாதிருப்போம். தந்தை சொல்லிலும் பெரிய சொல் இல்லையென்பதை உணர்வோம். அறிவையளிக்கும் ஆசிரியர்களினதும் பெரியோர்களினதும் அறிவுரைகளைக் கேட்டுப் பணிவன்புடன் பணியாற்றுவோம். இவ்வாறு இளந்தளிர்கள் உறுதிகள் பெற்றும் சொல்லுக் கேட்டும் வளர்ந்தால் ஒளிமயமான எதிர்காலம் சாலவுமுண்டு. நோர்வேயில் முதன் முதலாகத் தோன்றிய தமிழ்ச்சிறுவர் பாடசாலை இரண்டு தசாப்தங்கள் நிறைவு செய்துள்ளதறிந்து மட்டற்ற மகிழ்வடைகிறேன். தமிழ் பாடசாலையின் வளர்ச்சிக்கும், பாடசாலை ஆரம்பமாவதற்கும் பாடுபட்ட அன்பர்களனைவர்க்கும் மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துச் சிறியேனையும் ஒரு பொருட்டாக மதிப்பளித்த அன்புள்ளங்களுக்கும் மலர்க்குழுவினர்க்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் கூறுகின்றேன்.

தமிழ்ச்சிறுவர் பாடசாலை வாழ்க.
தமிழறிவு வளர்க.
இறையருள் ஓங்குக.



எங்கள் கொடி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்!

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் இந்த ஐம்பூதங்களின் ஆட்சியின் கீழேதான் உயிரினங்களின் வாழ்தல் நிச்சயிக்கப்படுகின்றது. மனித குலத்தின் மாட்சியும் சாதனைகளும்கூட இந்த ஐந்து சக்திகளின் உறுதுணையுடனேயே நிகழ்ந்தேறுகின்றன. இந்த ஐந்து சக்திகளின் தாக்கத்தின் பொதுமையப் புள்ளியான தோன்றல்தான் ககனவெளியில் தோற்றம்பெறும் ஏழு வர்ணங்களின் கலவையான வானவில். உலகின் எத்திசையில் தோன்றினும் வானவில்லின் வர்ணங்களில் பேதமில்லை. ஏழு வர்ணங்கள், ஏழு வர்ணங்கள்தான். இந்த ஏழு வர்ணங்களும் ஒன்றையொன்று ஒற்றுமையோடு பிணைந்திருந்தால்த்தான் அழகிய வானவில். எனவே, இந்த ஏழு வர்ணங்கள் உலகத்தின் பொதுமைக்கும், ஒற்றுமைக்கும், அழகிற்கும், கூட்டு சக்திகளின் பெறுபேற்றுக்கும் உதாரணமாய் விளங்குவதால் எமது பாடசாலையின் பதாகைக்காக இந்த ஏழு வர்ணங்களையும் தேர்வு செய்கின்றோம்.
அத்தோடு, பேர்கன் மாநகரின் குறியீடாக இங்குள்ள ஏழு மலைகள் சித்தரிக்கப் படுவதால் 'ஏழு' என்ற இலக்கமும் இயல்பாகவே எமது பதாகைக்குப் பொருந்தி வருவது சாலச்சிறந்து நிற்கின்றது.

இந்த ஏழு மலைகளையும் முக்கோண வடிவில் வரைவதற்கான காரணம்:
எமது சமூகம் கலை கலாச்சார விழுமியங்களாலும், ஆன்மீகப் பற்றினாலும் மிக இறுக்கத்தைக் கொண்ட சமூகமாகும்.
இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை எடுத்துக்கொண்டாலும் அவை குறிப்பன முக்கோண வடிவம்தான்.
பரம்பொருள் என சிவபெருமானை முக்கண்ணன் என முன்மொழிவதும் முக்கோண வடிவம்தான்.
பிதா, சுதன், தூயஆவி என கிறிஸ்தவ சமயத்திலும் வரையப் படுவது முக்கோண வடிவம்தான்.
இப்படி அனைத்து மதத்தவராலும் முக்கோண வரைபு முக்கியத்துவம் பெற்றதாகும்.
மிக முக்கியமான கருத்தாக, பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் என்ற மூவரின் முழுமையான முயற்சியும் ஒரு கல்விக்கூடத்திற்குத் தேவை என்பதை வலியுறுத்துவதாகவும் இந்த முக்கோணத்தை நாம் கொள்ளலாம்.

பின்புலத்திலிருக்கும் கடல்நீல வர்ணம்:
கடல் கடந்து நாம் வேற்று நாடுகளுக்கு வந்தாலும்கூட எம்மையும், எமது தேசத்தையும், உறவுகளையும் இணைப்பதும் கடல்தான். உலகநாடுகள் பிரிக்கப் பட்டிருப்பதும் கடலால்த்தான், எல்லா நாடுகளையும் இணைப்பதும் கடல்தான்.
இதுபோல் நிறையவே அர்த்தங்களை நாம் பின்புல இளநீல வர்ணத்திற்கு எடுத்துக்கொள்ள முடியும்.
மிக முக்கியமான விடையம்: முதலாம், இரண்டாம் தர மாணவர்களுக்கும் வரைவதற்கு இலகுவாகவே இந்தப் பதாகை வடிவமைக்கப் பட்டுள்ளது.

நாங்கள்

பாலர் பிரிவும் ஆசிரியர்களும்

இருமொழி மாணவர்களும் ஆசிரியர்களும்

தமிழ் ஆசிரியரும் மாணவர்களும்

தமிழ் ஆசிரியரும் மாணவர்களும்

தமிழ் ஆசிரியரும் மாணவர்களும்

நாங்கள்

தமிழ், சமய ஆசிரியரும் மாணவர்களும்

தமிழ் ஆசிரியரும் மாணவர்களும்

தமிழ், சமய ஆசிரியரும் மாணவர்களும்

பண்பாட்டுக்கல்வி, நடன ஆசிரியர்களும் மாணவர்களும்

ஆசிரியர்கள்

தமிழ்ச்சிறுவர் பாடசாலை – பேர்கன்

Tamilsk Barneskole - Bergen

20 ஆண்டுகள் நிறைவுவிழா

20Års Jubileum

நிகழ்ச்சிநிரல் *Programmer*

அமைதி வணக்கம் - stillhet
வரவேற்புரை – velkomst tale
குத்துவிளக்கு ஏற்றல் - tenning av tradisjonell velkomst lampe
பாடசாலைக் கொடி ஏற்றல் - skolens flagg heising
பாடசாலைக்கீதம் - skole sang
வரவேற்பு நடனம் - velkomst danse
தத்தி தத்தி - பாலர் நடனம் - danse fra de minste
இருமொழி மாணவர்கள் வழங்கும் கிராமிய நடனம் - Danse fra to språklig barn
மலர் வெளியீடு - utgi jubileums blad
பிரதமவிருந்தினர் உரை- திருமதி.சிகுறுன் இராஜேந்திரம் - tale hoved gjest Sigrun Rajendram
கோலாட்டம்: பத்துக்கட்டளை (விவிலியத்திலிருந்து) - framføring "de ti bud" med danse
கம்பு நடனம் - danse med pinne
அறிவுள்ள காகம் - program fra forskole og barnehage trinn
சிற்றுரை - tale representant fra fylkeskommune
நாடகம்: எங்கள் வாழ்வு - drama "vårt liv"
சிற்றுரை - tale Trude Drevland (være ordfører)
கும்மி நடனம் folke dans
சிற்றுரை - tale Rektor, St. paul skole - Gjermund Høgh
சக்கேயு – bible fortelling "sakeu"

இடைவேளை (15 நிமிடங்கள்) - intervall

ஆசிரியர் கௌரவிப்பு – presentere lærerne
தமிழுக்குத் தந்த கனி - Drama
சிற்றுரை – tale representant Tverrpolitisk Solidaritets gruppe for Srilanka
நாடகம்: எமக்கென்று ஒரு நாள் - drama "En dag for oss"
சிற்றுரை - தி.திருச்செல்வம் - tale fra skole undervisnings ansvarlig
வில்லுப்பாட்டு - பாரதி கண்ட புதுமைப் பெண் tradisjonell fortelling med musikk
இதயத்தை வருடிய கானங்கள் musikk innslag fra barna – "sanger"

நன்றியுரை – takke tale

-எஸ்தாக்கி ஜெயராஜ்-
(முன்னைநாள் உதவித் தலைமை ஆசிரியர்,
பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலை)

இன்றைய நிகழ்வுகளும், செயல்களும், சாதனைகளுமே நாளைய வரலாறு! சமகாலத்து நிகழ்வுகளையும் உண்மைகளையும் நாம் அடுத்தடுத்த தலைமுறையினர் அறியும் பொருட்டு இன்று பதிவு செய்து கொள்ளவில்லையெனில் எதிர்கால சந்ததியினர்க்கும், வரலாற்றுக்கும் தவறிழைத்தவர்களாவோம்.

இவற்றைக் கருத்திற் கொண்டு பேர்கன் தமிழ்ச்சிறுவர் பாடசாலை பற்றிய சிறு குறிப்பையேனும் இந்த 20ஆண்டுகால நிறைவு மலரில் பதிவு செய்ய முனைகின்றேன்.

இது ஒரு முற்றுமுழுதான வரலாற்றுப்பதிவு இல்லையாயினும், பேர்கன் தமிச்சிறுவர் பாடசாலை கடந்துவந்த பாதையைத் திரும்பி நோக்கும் ஒரு உந்துதலுக்காகவேனும் அடியிடக்கூடும் என்ற முனைப்போடு இச்சிறு குறிப்பொன்றின் தேவை கருதியே இங்கு எழுதுகின்றேன்.

புலம்பெயர்வாழ் தமிழ்ச்சிறுவர்களின் தமிழ், தமிழ்க்கலாச்சாரம் பண்பாடுகளின் வளர்ச்சி கருதி 1987ம் ஆண்டு நோர்வே நாட்டின் பேர்கன் நகரிலுள்ள மாநகராட்சியின் உதவியுடன் தமிழ்ச்சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இப் பாடசாலையின் வித்திடலுக்கும், வளர்ச்சிக்கும் பிரதான காரணகர்த்தாவாக நாம் என்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர், நோர்வேவாழ் பெரும்பான்மைத் தமிழர்களால் குட்டி அங்கிள் என்று அழைக்கப்பட்ட அமரர்.திரு.அந்தோனிப்பிள்ளை இராஜேந்திரம் அவர்களாகும்.

நோர்வேக்கு வந்த முதலத் தமிழன் என்ற பெயரை அமரர் அவர்கள் வரலாற்றில் பதிவு செய்து கொண்டதுபோல், பேர்கன்வாழ் தமிழர்களின் வரலாற்றுப்பதிவிலும் இந்தப் பாடசாலைக்கு வித்திட்டதன்மூலம் பெருமையுடனும் புகழுடனும் நினைவில் கொள்ளப் படுகின்றார்.

மேற்படி பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம்முதல் இன்றுவரை திருமதி.செறின் சந்தியாப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராக அயராது மிகுந்த அர்ப்பணிப்போடு தெண்டாற்றி வருகின்றார் என்பதையும் நாம் இந்த வேளையில் குறிப்பிட்டேயாக வேண்டும்.

அத்துடன் பெற்றோர், நிர்வாகத்தினரின் சலிப்பற்ற ஒத்துழைப்பும் பராட்டப்பட வேண்டியதே.

எமது பாடசாலை தனியே தாய்மொழிக் கல்வியுடன் நின்றுவிடாது ஆரம்ப காலங்களிலேயே கலைப் பயிற்சிகளாக நாட்டியம், நாடகம், நடனம், சங்கீதம், பேச்சு போன்றவையும், சமயம் முதலியனவும் போதிக்கப்பட்டு வந்தன. கலைப் பயிற்சிகளை எமது சிறார்கள் மிகவும் ஆர்வத்துடனும் விருப்புடனும் கற்றுக் கொண்டது மட்டுமல்ல, பல அரங்காற்றுக்களையும் செய்தனர்.

எமது பாடசாலை, எமது வகுப்பறை, எமது சமூகம் என்று சுருங்கி நிற்காது அதையும் தாண்டி நோர்வேஜிய மக்கள் மத்தியிலும் எமது மாணவர்கள் அரங்காற்றுக்களைச் செய்தனர். அந்த வகையில் பேர்கன் நகரிலுள்ள வயோதிபர் இல்லங்களிலும், பாடசாலைகளிலும், பிறமொழி மக்கள் முன்னிலையிலும் அரங்காற்றுக்களை நிகழ்த்தி மிகுந்த பாராட்டுதல்களையும், வரவேற்பையும் பெற்றார்கள்.

மரபு, நவீன கலைப்படைப்புக்களோடு மட்டும் நாம் நிற்காது எமது பாரம்பரிய கலையான நாட்டுக்கூத்தையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, பயிற்றுவிக்கப்பட்டது.

நாட்டுக்கூத்தைப் பொறுத்த மட்டில் 1990இன் பிற்பகுதியில் செபஸ்தியார் நாட்டுக்கூத்தும் (இரு தடவைகள்), தொடர்ந்து யுவானியார் நாட்டுக்கூத்தும் என்னால் நெறிப்படுத்தி மேடையேற்றப்பட்டது.

நாடக அரங்காற்றுக்களைப் பொறுத்தவரை பல சிறு சிறு நாடகங்கள் பேர்கன் தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையுடன் வெவ்வேறு பல விழாக்களில் எமது சிறார்களால் அரங்கேற்றப் பட்டன. இந்த வகையில் பாடசாலை ஆண்டுவிழாக்களின்போது ஆசிரியர் திரு.மூர்த்தி அவர்களின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட கர்ணன், ஆசிரியர் திரு.எல்மர் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட தர்மி போன்ற நாடகங்களையும் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

ஆரம்ப காலங்களிலும் சரி, இன்றும்சரி நடனம் சங்கீதம் போன்ற கலைப் பயிற்சிகளுக்கும் மேடையேற்றங்களுக்கும் பாடசாலை முக்கியத்துவம் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. நடனம், சங்கீதம் போன்ற மேடையேற்றங்களைப் பொறுத்தமட்டில் மாணவர்களிடமிருந்து இன்று மிகுந்த பெறுபேறுகளையும், முன்னேற்றங்களையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இன்று பணியாற்றிக்கொண்டிருக்கும் ஆசிரியர்குழாமும் பல்வேறுபட்ட நவீன அரங்க வடிவங்களைக் கையாண்டு புதுப்புதுப் பிரதிகளை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கின்றார்கள். அத்தோடு எமது பாடசாலையின் மாணவர்கள் தாய்மொழிக்கல்விப் பரீட்சைகளிலும் அதிகூடிய புள்ளிகளெடுத்து திறமைச்சித்தியெய்தியுள்ளார்கள் என்பதையும் நாம் பெருமிதத்தோடு சொல்லித்தானாக வேண்டும்.

மொழியாளுமை, கலைத்திறன், பண்பாட்டு விழுமியங்கள், சமூக நோக்கு, ஆன்மீகம் என்று அனைத்து முனைகளிலும் எமது சிறார்களை வளர்க்கவும், நெறிப்படுத்தவும் இந்தப் பாடசாலைக்கு பின்புலத்தில் பலரது தன்னலமற்ற அர்ப்பணிப்பும், ஒத்துழைப்பும் இருந்துகொண்டேயிருக்கின்றது என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. இதற்கு பெற்றோர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று கூறிக்கொண்டு, அதற்குமப்பால் பேர்கன் மாநகரசபை, புனித பவுல் பாடசாலை போன்றவற்றிற்கும் நாம் நன்றியுடையவர்களாகின்றோம்.

பெற்றோர், ஆசிரியர், நிர்வாகம் இவை தவிர நீண்ட நெடுங்காலம் பாடசாலையின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், சரியான பாதையிடலுக்கும் முதன்மையானவர்களாயிருக்கும் நால்வரை இந்த நேரத்தில் நாம் குறிப்பிட்டேயாக வேண்டும்.

திருவாளர். பூலோகநாதன்,
திருவாளர். இயூஜின் செபஸ்தியான்,
திருவாளர். ஞானநாயகம்,
திருவாளர். அலோசியஸ் சந்தியாப்பிள்ளை
ஆகிய நால்வரின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவைகள் மறக்கப்பட முடியாதவையாகும்.



இப்பாடசாலை தொடங்கப்பட்டு 2007ம் ஆண்டோடு 20 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள அதே வேளை, நோர்வே நாட்டில் மட்டுமல்ல, இலண்டன் தவிர்ந்த அனைத்து ஐரோப்பிய நாடுகளையும் பொறுத்த மட்டில் இதுவே புலம்பெயர் தமிழர்களின் முதல் பாடசாலை என்ற பெருமையோடு நாம் அகமகிழும் அதேவேளை, இத்தனைகாலம் இதன் வளர்ச்சிக்காக பாடுபட்ட அனைவருக்கும் மாணவர்கள், பெற்றோர்கள் சார்பில் நன்றி சொல்வதோடு, தொடர்ந்தும் இப்பாடசாலை விழுதுகள் விட்டு வளர அடுத்த தலைமுறையின் பெயரால் கேட்டுக்கொண்டு விடை பெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!!

நாடகம்

எங்கள் வாழ்வு

-ரெத்தினம்-

(இருபுறங்களிலும் தமிழ், நொஸ்க் எடுத்துரைஞர்கள் நிற்றல்)

தமிழ்:
இனி எங்கள் நிகழ்வு.
இருவேறு கலாச்சாரத்துள்
இரு முகங்கொண்டு வாழும் எங்களின் நிகழ்வு.
எங்கள் வாழ்வு இந்த நாட்டில் எப்படி நகர்கிறது?
ஆழ்ந்து கவனிக்கப்படவேண்டிய கேள்வி இது.

Norsk:
Vårt program viser et utsnitt av livet til den flerkulturelle generasjon i Norge.
To kulturer og byrden som følger med.
Et program vi anbefaler deg å følger godt med på.

தமிழ்:
இவர்களுக்கென்ன சொகுசான, வசதியான வாழ்க்கையென நீங்கள் நினைக்கலாம்.
எங்களின் தோள்களில் சுமத்தப்பட்டிருப்பது சாதாரண சுமையல்ல.
மொழிச்சுமை
கலாச்சாரச்சுமை
கலைச்சுமை
மதச்சுமை
இவை நாம் சுமக்கும் இன்பச்சுமைகள்தான்
இச்சுமைகள் எப்படி எம்மேல் சுமத்தப்பட்டன?
எப்படி நாம் சுமக்கிறோம்.

Norsk:
Dere kan tro at livet I Norge går enkelt for seg,
Et vidunderlig liv uten bekymringer og luksuriøst tilværelse.
Ja vi har det bra,
Men den byrden vi bærer på våre skuldre er ikke av den ordinære typen.
Språk
Kultur
Og religion er verdifulle deler av vårt liv
Men hvordan ble disse en del av oss og hvordan bruker vi dem?
La oss først ta dere med til vårt fedreland, Srilanka.

தமிழ்:
இப்போது நாம் எமது அன்புப் பெற்றோர் பிறந்து வாழ்ந்த அன்னைபூமிக்கு சற்று சென்றுவருவோம்.

(சிறிலங்கா கிராமத்துக்காட்சி:
இசையுடன் நிகழ்த்திக் காட்டல்: காலைக்காட்சி, பிள்ளைகள் பாடசாலைக்குப்போய் படித்தல், விமானச்சத்தம்,

குண்டுகள் போடுதல், பிள்ளைகள் காயப்படுதல், ஒரு பிள்ளை இறத்தல், பெற்றோர்கள் கத்துதல், இறந்த குழந்தையைத் தூக்கி மடியில் வைத்தபடி கவிதையில் தன் சோகத்தினைக் கொட்டுதல்).

கவிதை:
1. செல்வமே செந்தூர
சந்திரனே நாங்களினி
செல்லிடம் ஏதம்மா....ஆ...
அம்மா.... அம்மா...
இந்த எருக்கடர்ந்த பூமியிலே

2. விடிநிலத்தைக் காணவென்று
முன்றல் வந்த உன்முகத்தை
வெடி வைத்து தகர்த்த கதை....
கண்மணியே... என்னுயிரே...
யாரிடம் நாம் சொல்லியழ..?

6. மலரான மலருன்னை
மலரமுன்னம் மண்குழியில்
விதையாகத் தூவி விட்டோம்....
செல்லமே... செல்வமே...
தங்கமே தூங்கிடம்மா.

(பிள்ளையை ஊர்மக்கள் சுமந்து செல்லுதல்)

(மீண்டும் விமானச்சத்தம் கேட்டல், மக்கள் சிதறடித்து ஓடுதல். ஓடியவர்களுள் 6 பேர் மீண்டும் மேடைக்குவந்து அருகிலிருக்கும் பெட்டகம் ஒன்றை மேடையை சுற்றிவிட்டு வெளியே போதல்.)

தமிழ்:
இதுதான் எங்கள் தாய்மண்ணின் கடந்தகால, நிகழ்கால நிலை.
இந்த யுத்தகோரத்தால் எம்மக்கள் படும் அவலங்களை எம்மால் விபரிக்கவே முடியாது.
எங்கள் குரல்கள் நெரிக்கப்பட்டன.
எங்கள் கரங்கள் இறுகக் கட்டப்பட்டன.
அன்றாட வாழ்க்கைப்பசி போக்கவே காற்றோடும், கடலோடும், வயலோடும், வரப்போடும் போராட்டம் நடாத்தி உள்ளதைக் கொண்டே இன்ப வாழ்க்கை நடாத்தி மகிழ்ந்தோம்.
கடல், தரை, ஆகாயம் என எல்லாப் பக்கங்களிலிருந்தும்
எம்மைக்கொல்லும் குண்டுகள் பொழிந்தன.
ஊரிழந்து, உறவிழந்து சர்வதேசக்கடல்கள் பல கடந்து ஓடத்தொடங்கினோம்.

Norsk:
Dette er vårt fedrelands fortid og nåtid.
Vi er stumme og våre hender er bundet. Ingen ord kan beskrive situasjonen i Sri Lanka.

Vi dro til sjøs og slåss mot vind og vann for å fiske, og slet oss gjennom jordbruk dag etter dag for å mette våre munner. Det lille vi fikk var vi lykkelige med.

Nå bli vi angrepet fra sjø, land og luft. Vi ble tvunget ut i en reise for å finne et trygt sted i verden.
Vårt skip seilte over hav og forbi flere land. Og vårt fedreland lå stadig mer i det fjerne.

தமிழ்:
எங்கள் படகு நோர்வேக் கடலையும் தாண்டி வந்தது.
அன்புள்ளங்கொண்ட நோர்வே நிலத்திலும்

எங்கள் இருப்பு நிலைகொண்டது.

Norsk:
Vår reise endte ved den norske kyst hvor vi ble møtt av det norske folk som med varme i hjertet tok oss vennlig i mot.

(மேடையில் பெட்டகத்துடன் சுற்றுதல்)
(Vandre rundt med kassen)

தமிழ்:
இந்தப் பெட்டகத்துள்ளேதான் எங்கள் மொழி,
கலை, கலாச்சாரம், மதம் அனைத்தையும் சுமந்து வந்திருக்கிறோம்.
எங்கள் பாட்டனார் பேணி வளர்த்து எம்பெற்றோரிடம் கொடுத்த சொத்துக்கள் இவை.
இப்போது இச்சொத்துக்கள் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

Norsk:
I denne kassen ligger vårt språk, vår kultur og vår religion. Denne arven våre forfedre beskyttet og videreførte, ble vårt ansvar å bære i reisen fra fedrelandet.
Nå er det vi som har arvet den.

(ஒரு ஆசிரியர் பிள்ளைகளுக்கு கற்பித்தல், ஒரு ஆசிரியர் பிள்ளைகளுக்கு நடனம் கற்பித்தல் ....)
(En lærer underviser barna.....)

தமிழ்:
இருவேறு மொழியிலே
இருவேறு கலாச்சாரத்துள்ளே
வசித்துவரும் நாம் பிறந்த நாடாகிய
நோர்வேயின் பண்புகளும்
எமது முன்னோர் தந்த
அன்னைபூமியின் பண்புகளும்
எமது அன்னைத் தமிழின் இனிமையும்
எமது பெற்றோர் ஆசிரியர்களால்
எமக்குத் தருகிறார்கள்.

Norsk:
Gjennom våre foreldre og lærere forsterkes vår evne til å bevare og videreføre både den vakre tamilske kulturen, dets språk, normer og verdier, og den norske kulturen.

தமிழ்:
எமது இருநாடுகளினது பண்புகளையும்
எமது இரு தோள்களிலும் தாங்கி
நோர்வே நாட்டுக்கும்
ஈழ நாட்டுக்கும்
ஏற்ற நற்சந்ததியினராய்
இன்புற்று வாழ்வோம்.

Norsk:
Vår generasjon må tilpasse oss et liv som flerkulturell og ta vare på de normer og verdier som begge kulturene har å by på.
Det er vår kulturarv og er nå en byrde vi må bære på våre skuldre for å kunne videreføre denne verdifulle arven.

(பாடல்)
(முற்றும்)

பத்துக் கட்டளைகள்

பிரதியாக்கம்: -சகிலா யூலியஸ்



முன்னுரை: சீனாய் மலை முழுவதும் புகைந்து கொண்டிருந்தது. ஏனெனில் ஆண்டவர் அதன்மீது நெருப்பில் இறங்கி வந்தார். அதன் புகை தீச்சூளையிலிருந்து எழும் புகைபோல் தோன்றியது. மலை முழுவதும் அதிர்ந்தது. எக்காள முழக்கம் எழும்பி வர வர மிகுதியாயிற்று. மோசே பேசிய போது கடவுளும் இடிமுழக்கத்தில் விடையளித்தார்.

(இசை இடி, முழக்கம்)

ஆண்டவர் சீனாய் மலையுச்சியில் இறங்கி வந்தார்.
ஆண்டவர் மோயீசனை நோக்கி "ஆரோனை அழைத்துக் கொண்டு மேலேறி வா" என்றார்.

(இசை)

மோயீசன் கீழிறங்கி வந்து ஆரோனை அழைத்துக் கொண்டு மேலே செல்கிறார்.

(இசை இடி, முழக்கம், எதிரொலியுடன்)

1. நான் உன் கடவுளாகிய ஆண்டவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருந்தால் அது ஆகாது.
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.

3. ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாய் இரு.
4. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.
5. கொலை செய்யாதே.
6. விபச்சாரம் செய்யாதே.
7. களவு செய்யாதே.
8. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.
9. பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண்ணை விரும்பாதே.
10. மாடு, கழுதை பிறர்க்குரிய எதையும் கவர்ந்திட விரும்பாதே.

(தொடர்ந்து இசையுடன் மோசே, ஆரோன் இரண்டு கற்பலகைகளுடன் ஊருக்குள் வருதல் குந்திக் கொண்டிருக்கும் பெண்களிடம் இருவரும் கட்டளைகளைக் காட்டுதல் காட்டிய பின் பெண்கள் எழுந்து கோலாட்டம் ஆடுதல்)

(கோலாட்டம்)

கோலெடுத்தாடுவீர் கூடியே பாடுவீர்
கூறுவேன் முந்தின கட்டளைகள்
செம்மையாய் உங்களைப் படைத்த தேவன் ஒரே கடவுள் நாம் தாமே - 2

சொல்லும் இரண்டாம் கட்டளை யாதென்றால் தேவ திருநாமம் வீணாக சொல்லாதிருப்பாய் காரணமின்றி சொல்வது தெய்வத்தின் தூசணமாம் - 2

தேவனின் திருநாட்களைப் புனிதமாகக் கொண்டாடுஎன்பதுவே மூன்றாவது கட்டளை என்பார் பெரியவர்கள்தானே -2

அம்மா அப்பாவை சங்கித்திருப்பாய் என்பது நான்காம் கட்டளையாம்.

அடுத்தவன் உயிரைப் பறிக்காதிருப்பாய் என்பது ஐந்தாம் கட்டளையாம் -2

விபச்சாரம் என்பது மோகபாவம்
செய்யாதிருப்பாய் ஆறாவது

களவுத்திருட்டு செய்யாதே
என்பது ஏழாம் கட்டளையாம் -2

பொய்ச்சாட்சி சொல்லாதே என்பதுதான்
எட்டாவது கட்டளையாம் -2

பிறரின் தாரத்தை விரும்பாதே என்பது
ஒன்பதாம் கட்டளையாம் -2

மற்றவரின் பொருளில் ஆசை வைக்காதே
மாற்றானின் மனைவியை நினையாதே -2
என்னும் பத்துக் கட்டளைகளைத்
தந்தார் எமது தேவனே -2

இந்தப் பத்துக் கட்டளைகளை நாமும்
வாழ்வில் அனுசரிப்போம்
அனுசரித்தே நாளும் வாழ்ந்து காட்டுவோம்
பரந்த உலகின் மீதே... - 2

(உசாத்துணை: பரிசுத்த விவிலியம்)
விடுதலைப்பயணம் 20:1-17

சக்கேயுவின் தேடல்

பிரதியாக்கம்: சகிலா யூலியஸ்

ஜெருசலேம் நகரெங்கும் கால்நடையாக மக்கள் தேவைகளைத் தேடிச்சென்று அன்பின் பொருட்டு அவர்களுக்கு உதவியது அந்த அன்பின் உருவம். கானாவூரில் தொடங்கி சிலுவையில் தொங்கும் வரை புதுமைகள் ஆற்றினார். அந்த இறைமகன் இயேசு விதவையின் மகனை உயிர்ப்பித்தார். பன்னிரண்டு வயதுச் சிறுமியை உயிர்ப்பித்தார், முடவனை நடக்கச் செய்தார், செவிடனைக் கேட்க வைத்தார், குருடனைப் பார்வைபெறச் செய்தார். இவ்வாறு புதுமைகள் பல ஆற்றி ஏழை மக்களின் தோழனாக செயற்பட்ட அந்த இறைமகனைக் காண சக்கேயு என்பவன் ஆசை கொண்டதில் வியப்பென்ன?

(ஒரே அரங்கில் இயேசுவும் கூட்டமாக மரத்தடியால் வருதல். குரடருக்கு பார்வை, செவிடருக்கு கேள்வி, நோயாளியைக் குணமாக்குதல் இதன் தொடர்வில் மரத்துக்குக் கிட்ட வந்ததும்)

("குள்ள மனிதன் சக்கேயு" என்ற பாடலுக்கு டும் டும் டும் என மேளம் அடித்தல். அப்போது இயேசு ஒரு பக்கத்தில் கூட்டத்துடன் போய்க்கொண்டிருத்தல்)

குள்ள மனிதன் சக்கேயு துள்ளிக் குதித்து ஓடினான்.
(துள்ளிக் குதித்து ஓடுதல்)

அண்ணல் இயேசுவைக் காணவே
ஆசை அதிகம் கொண்டானாம்
ஆசை அதிகம் கொண்டானாம்
(ஆவலோடு நடித்தல்)

அருகில் இருந்த அத்திமரம்
ஆங்கோர் கிளையில் புத்தியுடன்

குரங்கைப் போல தொற்றியே
குந்திக் கீழே பார்த்தானாம்
குந்திக் கீழே பார்த்தானாம்

(மரத்தில் சிரமப்பட்டு ஏற முனைந்து ஏறுதல்)

இயேசு அங்கே நின்றாரே
இறங்கு கீழே என்றாரே....
இயேசு அங்கே நின்றாரே
இறங்கு கீழே என்றாரே
நேசா இன்று உன்வீட்டில்
உண்பேன் என்று உரைத்தாரே
நேசா இன்று உன்வீட்டில்
உண்பேன் என்று உரைத்தாரே

(மக்களனைவரும் முணுமுணுத்தல்
சக்கேயு சங்கடத்தோடு நிற்றல்)

குள்ள மனிதன் சக்கேயு
உள்ளம் மகிழ்ந்து போனானே
குள்ள மனிதன் சக்கேயு
உள்ளம் மகிழ்ந்து போனானே

(மகிழ்ச்சியுடன் ஆடுதல்)

தனது உடமை அனைத்தையும்
தருவேன் என்று மொழிந்தானே
தனது உடமை அனைத்தையும்
தருவேன் என்று மொழிந்தானே

(இயேசு அவனை அன்போடு அணைத்துக் கொள்கிறார்)

இயேசு அவனை அணைத்தாரே
மீட்புப் பெற்றாய் என்றாரே...
இயேசு அவனை அணைத்தாரே
மீட்புப் பெற்றாய் என்றாரே

இழந்த உங்களைத் தேடவே
வந்தேன் என்று உரைத்தாரே...
இழந்த உங்களைத் தேடவே
வந்தேன் என்று உரைத்தாரே...

(உசாத்துணை: பரிசுத்த விவிலியம்)
லூக்கா *19: 1-10*

நாடகம் (தாளலயம்)

பிரதியாக்கம்: ரெத்தினம்

(தந்தனதானே தானனதானே தானனதானே தானே)

தந்தை: என்னடி கனகம் இத்தன நேரமா நம்மட மகனக் காணல?
பேர்கன் முழுக்க சுத்துறதுதான் அவனுக்கு வேலையாப் போச்சுது
இந்த பேர்கன் முழுக்க சுத்துறதுதான் அவனுக்கு வேலையாப் போச்சுது

தாய்: சும்மா இருங்க அவனுக்கு இண்டைக்கு கொம்பியூட்டர் வகுப்பெல்லோ.
எந்த நேரமும் அவன நீங்க பேசிக்கொண்டு இருக்கிறீங்க.

தந்தை: புதுசு புதுசா வகுப்பு வகுப்பெண்டு நெடுகத் தானே திரியுறார், எனக்குக் கோபம் வந்துதெண்டா, முறிச்சுப்போட்டுப் போயிருவன்.

மகன்: பப்பா ஏதோ என்னப் பற்றிக் கதைக்கிற மாதிரி கிடக்கிது. என்ன பப்பா என்னில நீங்க கோபம் போல இருக்கிது.

தாய்: பப்பா என்று சொல்லாதேயென்று எத்தின தரம் நான் சொன்னனான். அப்பா என்று ஆனா வரிசையில் கூப்பிட வேணும் விளங்குதோ.
அப்பா என்று ஆனா வரிசையில் கூப்பிட வேணும் விளங்குதோ.

தந்தை: அப்பா சுப்பா என்று சொல்லி விசயத்த நீயும் மாத்தாத.
இத்தனை நேரமும் எங்க நீயும் போய்ற்று வந்தாய் சொல்லிப்போ.

மகன்: எனக்கு இன்றைக்கு கொம்பியூட்டர் வகுப்பெல்லாப்பா நடந்தது. அதனாலதான் வீட்டுக்கு வர கொஞ்சநேரம் பிந்தீற்றுது.

தந்தை: ஆரக்கேட்டு கொம்பியூட்டர் வகுப்பை நீதான் தொடங்கினாய்.
எனக்குக் கெட்ட கோபம் வரும் உடனே அதை நீ நிறுத்திடு.

நண்பன்: என்னடா இந்தப் பரஞ்சோதிய இன்னும் வெளியில காணல.
உள்ள போகவும் பயமா இருக்குது, அந்த மனுசன் பேசுமே.

தந்தை: வெளியில யாரோ கதைக்கிற மாதிரி சத்தம் ஏதோ கேட்கிது.
கதவத்திறந்து பாரு கனகம் கள்ளர் கிள்ளர் வந்திருப்பினம்.

தாய்: (கதவைத்திறந்து பார்த்தல்) என்ன தம்பி வெளியில நிண்டு தனியாய் அலம்பிக் கொள்கிறாய்.
மணியை அடித்தால் திறப்பம்தானே வாரும் தம்பி உள்ளே வாரும்.

நண்பன்: இல்லையம்மா உள்ளே வர எனக்குப் பயமாக் கிடக்கிது.
பரஞ்சோதிய வெளியே ஒருக்கா வரச்சொல்லுங்க அதுபோதும்.

தகப்பன்: என்ன கனகம் அங்க யாரோட கதைத்துக் கொண்டு நிக்கிறாய்.
பெரிய மனுசர் யாருமெண்டால் உள்ளே கூப்பிட்டுக் கதையன் கனகம்.

தாய்: இல்லையப்பா தம்பியிட நண்பர் ஒருத்தர் வந்துள்ளார்.
நான் அவரக் கூப்பிட்டனான் அவர்தான் வெளிய நிக்கிறார்.

மகன்: பொறுத்த நேரம் வந்து என்ன மாட்டி விடப்போகிறான்.
ஏதாவது செய்து இப்ப தப்பிக்கொண்டு போகவேணும்.

தகப்பன்: (அமைதியா வெளிய போய்ப் பார்த்தல்)
(வசனம்) ஓ இவரா.. (அவரின் தலையைத் தொட்டுப்பார்த்தல், முள்ளுக் குத்துவது போல் பாவனை செய்தல்)

தலையப்பாரு முள்ளுப்பன்றி மாதிரியெல்லோ கிடக்கிது.
இவனோட சேராதேயெண்டு எத்தின தரம் நான் சொன்னனான்.

மகன்: (வசனம்) சும்மா இருங்கப்பா. நெடுகப்பாட்டுப் பாடிக்கொண்டு தான் இருப்பேர். எவ்வளவு பெரிய வேலையெல்லாம் எங்களுக்கு இருக்கிது.

நண்பன்: (வசனம்) பரஞ்சோதி நேரம்போச்சு கெதியா வா. கன அலுவலெல்லா கிடக்கிது.

தகப்பன்: (வசனம்) ஓகோ உங்களுக்கு நிறைய வேலை இருக்குதோ. இந்த றோட்டு றோட்டாத்திரியுறது தான் உங்கட அலுவலோ.

மகன்: ஐயோ அப்பா, நீங்க நெடுக எங்களக் கொச்சப் படுத்தித்தான் கதைப்பீங்க. சர்வதேச சிறுவர்தினம் வரப்போகுது. அதுக்காக நடக்கப்போற கருத்தரங்குக்கு நாங்க இப்ப போகப்போறம்.

தாய்: சர்வதேச சிறுவர்தினமா? அது என்ன ராசா?

மகன்: இது கேள்வி. ஒரு விசயம் தெரியாட்டால் இப்பிடிக் கேட்கவேணும்.

எடு1: சர்வதேச சிறுவர்தினம். இது சிறுவர்களாகிய எங்களுக்கு பல முக்கியமான உரிமைகளும் கடமைகளும் உண்டு. அவற்றை உலகிற்கு உணர்த்தும் நாளாகும். எமது உரிமைகளுக்குப் பெரியவர்கள் தடையாக இருக்கக்கூடாது. நாமும் எமது கடமைகளை செய்யத்தவறக்கூடாது.

எடு1: இப்போது நாங்கள் சிறுவர்களது சில முக்கியமான உரிமைகளையும் கடமைகளையும் பார்ப்போமா? சிறுவர்கள் கட்டாயம் பாடசாலைக்குப் போகவேண்டும்.

எடு2: சிறுவர்கள் கட்டாயம் பாடசாலைக்குப் போகவேண்டும். பாடசாலைக்குச் செல்வதனாலே தான் எமது ஆற்றல் வளர்கிறது. அங்கு தான் எமக்கு கல்வி என்னும் செல்வம் கிடைக்கிறது. செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் தான். மற்றைய செல்வங்கள் அழிந்துவிடும். ஆனால் கல்விச் செல்வம் அழியாது. ஒருவரிடமுள்ள கல்வி வெள்ளத்தினால் அழியாது, தீயால் வேகாது, கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாது. கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. இத்தனை சிறப்பு வாய்ந்த கல்வியை இளவயதிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

எடு1: சிறுவர்கள் வேலை செய்யக்கூடாது.

எடு3: இன்று பல நாடுகளில் எம்மைப்போன்ற ஏராளமான சிறுவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் தமது கல்வியை இழக்கின்றனர். தமது இன்பகரமான வாழ்க்கையைத் தொலைத்து நிற்கின்றனர். சிறுவர்களை வேலையில் அமர்த்துவது சர்வதேச சட்டத்திற்கே விரோதமானது.

எடு1: சிறுவர்கள் புகைக்கக்கூடாது.

எடு4: புகைத்தல் உடலுக்கு மிகவும் கேடானது. புகைக்க ஆரம்பிப்பவர்கள்தான் காலப்போக்கில் பெரும் போதைப் பொருட்களுக்கெல்லாம் அடிமையாகி விடுகின்றனர். எங்களது சிறிய உடலுறுப்புகளும் நோய்ப்பட்டு விடுகிறது. எனவே சிறுவர்கள் புகைப்பதோ மதுபோதை பாவிப்பதோ சர்வதேச குற்றமாகும்.

எடு1: சிறுவர்கள் ஆயுதம் ஏந்தக்கூடாது.

எடு5: இன்று பெருந்தொகையான மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நவீன ஆயுதங்களும் பல நுட்பங்களிலும் அதிகரித்தவண்ணமே உள்ளன. பாடப்புத்தகங்களை சுமக்க வேண்டிய பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் தங்களது தோள்களில் ஆயுதங்களைச் சுமக்க நிர்ப்பந்திக்கப் படுகின்றார்கள். இதனால் அவர்களது இன்பகரமான வாழ்வு தொலைந்து போகின்றது.

எடு1: சிறுவர்கள் கட்டாயம் விளையாட வேண்டும்.

எடு6: சிறுவர்கள் கட்டாயம் விளையாட வேண்டும். விளையாட்டு மனிதனது உடல் வளர்ச்சிக்கும், மனவளர்ச்சிக்கும் இன்றியமையாதது. சிறுவர்களாகிய எங்களுக்கென பல் வகையான விளையாட்டுக்கள் இருக்கின்றன. அவற்றினை சிறுவயதிலேயே நாங்கள் அனுபவிக்க வேண்டும். சிறுவர்களுக்கான கல்வியினைக்கூட விளையாட்டுக்கள் மூலம் கொடுக்க வேண்டுமென கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டள்ளது. விளையாடுவதனால் சிறுவர்கள் ஆரோக்கியம் அடைகின்றனர்.

மகன்: (பாடல்) அம்மா நான் விளையாடப் போறேன். ஆதரவாய் எனக்கு விடை தாங்க.
விளையாடப் போனால்த்தான் ஆரோக்கியம் அடைவோம்
அம்மா நான் விளையாடப் போறேன். ஆதரவாய் எனக்கு விடை தாங்க.

அப்பா: அதைத்தானே நெடுக நீ செய்கிறாய். ஆரோக்கியம் இருக்கிறது போதும்
உங்களிட கடமைகளை சரியாச் செய்யுங்க,
அது தான் எங்களுக்கு மகிழ்சி
பெற்றோரான எங்களுக்கு மகிழ்ச்சி.



தாமரைச்செல்வி கிறேசியன்
பாரத் அந்தோனிப்பிள்ளை
ஸ்டெனா எட்வேட்
சிசிலியா டேவிட்
சோபியா மனுவல்தாஸ்
மரியா ஸ்ரீபன்
மார்த்தா ஸ்ரீபன்
ஜெயமதன் ஜெயராஜ்
ஸ்ரீபன்ராஜ் தாஸ்நவி ஜெபமணி
பிரசாந் சந்தியாபிள்ளை
துஸாரா சின்னராசா
லில்லியான் பயஸ்
பிரசன்னா அந்தோனிப்பிள்ளை
அரோன் றொபேட்
கார்த்திகா எட்வேட்
மீரா திருச்செல்வம்
அனித்ரா எட்மண்ட்
அன்ரனி ஜெயராஜ்
ஜெனின்ரன் எதிர்வீரசிங்கம்
சில்வியா மனுவல்தாஸ்
ஜெரமி எஸ்தாக்கி
ஜெரமி அலெக்சாந்தர்
அசம்ரீன் அந்தோனிப்பிள்ளை
பீலிக்ஸ் அந்தோனிப்பிள்ளை
நிதர்சனா ராயப்பு
நிக்கோலா ஸ்ரீபன்
சாராப்பிரியா வீரசிங்கம்
தீபா திருச்செல்வம்
சன்சியா அந்தோனிப்பிள்ளை
மனுவல் சிமுன்சன்
ஸ்ரெபான் எதிர்வீரசிங்கம்
யெசிமா அமிர்தராஜ்
நதானியல் கருணைராசா
இன்பன்ரா அந்தோனிப்பிள்ளை
ஆதித்தன் ராயப்பு

சங்கீதன் வசந்தன்
ஜெனிபர் ஆனந்தராயர்
சுபீட்சன் அந்தோனிப்பிள்ளை
தவானி முருகன்
ஆதிரியான் சிமுன்சன்
ஜோக்கிம் அலெக்சாந்தர்
ரொபி வீரசிங்கம்
அனெஸ்தன் ஜெயராஜ்
சுபர்னா டெய்சி செபஸ்தியாம்பிள்ளை
ரபின் சபாரத்தினம்
ரேமி சபாரத்தினம்
ஜெறோன் றொபேட்
மைக்கிங்ஸ்ரன் மைக்கல்தாசன்
நிம் பிரான்சன் அந்தோனிப்பிள்ளை
திபானி ஆனந்தராயர்
கார்மன் நடராஜன்
கிறைஸ்ரன் ராசையா
நத்தாசியா கருணைராசா
டிவைனா எட்வேட்
சண்முகப்பிரியா ஜெகதீசன்
ஸ்ரீபனா செபஸ்தியாம்பிள்ளை
அமாலினி கனூரன்
கவிஸ்வா இராஜ்குமார்
காருண்யா கிருஷ்ணதாஸன்
மேர்ளின் ராயப்பு
மைக்டெவின் மைக்கல்தாசன்
திரிசா சிலுவைராசா
மைக்டிஷன் அந்தோனிப்பிள்ளை
பீலிக்ஸ் விஜேய் கனூரன்
சுஜித் நியோல் ஸ்ரெவன்சன்
யோர்டான் மனுவல்பிள்ளை
ஸ்ரெவநி எட்வேட்
செப்பானியா செபஸ்தியாம்பிள்ளை
அண்ண ராஜிகா மூவன்
எய்னார் நவீன் மூவன்

பேர்கன்
தமிழ்ச்சிறுவர்
பாடசாலையின்
ஆசிரியர் குழாம்

ஜாதவி கோபாலரட்ணம்

சாந்தி கனூரன்

மேரி திரேசா ஜெயராஜ்

யூலியஸ் அந்தோனிப்பிள்ளை

ராணி திருச்செல்வம்

லூர்துமேரி அந்தோனிப்பிள்ளை

ஜெனிட்டா சின்னராசா

திருச்செல்வம் திருச்சிற்றம்பலம்

துஸ்யந்தி கிருஷ்ணதாசன்

மேரி சுகந்தினி ஜேம்ஸ்

திரேசா அஞ்சலீனா எட்வேட்

செறின் சந்தியாப்பிள்ளை

யஸ்மின் றொபேட்

மரிற்றா ராயப்பு

Tip Top 9

Ready -made Show Room

- Readymade Dresses
- Textiles
- Gift Articles
- Fancy Articles
- Wedding &Birthday Cakes
- Rich Cakes

Motzfeldtsgt 7, 0187 Oslo
Tlf: 22172820, 41429592
E-mail: tt9oslo@gmail.com

Gratulerer med 20års Jubiliumsdag!

SparebankenVest

– satser på Vestlandet

Tlf. 815 22 002 – www.spv.no

Hilsen

Sparebanken Vest

LEBARA
MOBILE
Ring billigere
til Sri Lanka
med Lebara kontantkort
1,49
pr. min. til fasttelefon
1,99
pr. min. til mobil
Få 10% ekstra
når du lader opp
kontantkortet ditt
på www.lebara.no
LEBARA
MOBILE
bring them closer
www.lebara.no